ஸ்ரீ:

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

சிறிய திருமடல்

THE MADURA TAMIL SANGAM

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம்

உபய வேதாந்த வித்வான் அண்ணங்கராசாரியர்

முன்னோருரைகளைத்தழுவி எளிய நடையில்

தெளிய எழுதிய

திவ்யார்த்த தீபிகையென்னும் உரையுடன்,

காஞ்சீபுரம் யுனைட்டேட் அச்சுக்கூடத்தில்
அச்சிடுவிக்கப்பட்டது

இதன் விலை 0-12-0] 1926 [தபால் செலவு வேறு.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொதுத் தனியன்கள்.

(நம்பெருமாள் அருளிச் செய்தது.)

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్।
యతీన్ద్రప్రవణం వన్దే రమ్యజామాతరం మునిమ్॥

[ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.]

(ஆழ்வான் அருளிச் செய்தவை.)

లక్ష్మీనాథసమారమ్భాం + వన్దే గురుపరమ్పరామ్॥
యో నిత్యమచ్యుతపదామ్బుజ + రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే.

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் + வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத + ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.]

(ஆளவந்தார் அருளிச் செய்தது.)

మాతా పితా యువతయః + ప్రణమామి మూర్ధ్నా॥

[மாதா பிதா யுவதய: + ப்ரணமாமி மூர்த்நா.]

(ஸ்ரீபராசர பட்டர் அருளிச் செய்தது.)

భూతం సరశ్చ + శ్రీమత్పరాఙ్కుశమునిం ప్రణతోఽస్మి నిత్యమ్.

[பூதம் ஸரச்ச + ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.]

ஸ்ரீ:

* திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

சிறிய திருமடல்.

சிறிய திருமடல் என்னும் இத்திவ்யப் பிரபந்தமானது இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்து அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களுள் பிரதானரான நம்மாழ்வாரருளிச் செய்த சதுர்வேத ஸாரமான நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்யப்ரபந்தங்களுள் ஒன்றும். [பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம்-என்பன ஆறு திவ்யப்ரபந்தங்களாம்.]

---

* இவ்வாழ்வாருடைய வைபவத்தைப் பெரிய திருமொழி உரையின் தொடக்கத்திலே விரித்துரைத்தோம்; அங்கே கண்டுகொள்க.

ஸ்ரீமந்நாதமுனிகள் வகுத்தருளின அடைவில் மூன்ருவது ஆயிரமாகிய இயற்பாவில் ஒன்பதாவது பிரபந்தமாக அமைந்தது இது.

"வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி வேற்கணார் கலவியே கருதி, நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்" என்றும் "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத் தாழ்ந்தேன்" என்றும் தாமே அருளிச்செய்தபடி விஷயப்ரவணராய்த் திரிந்துகொண்டிருந்த இவ்வாழ்வார்தம்மை எம்பெருமான் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி 'விஷயங்களில் ஆழ்ந்து திரிகிற இவரை சாஸ்த்ரங்களைக் காட்டித் திருத்த முடியாது, நம் அழகைக் காட்டியே மீட்கவேணும்' என்று கொண்டு தன் அழகைக் காட்டிக்கொடுக்க, ஆழ்வாரும் அதைக்கண்டு ஈடுபட்டு "வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாது, அடியேன் நான் பின்னுமுன்சேவடியன்றி நயவேன்" என்னும்படி அவகாஹித்தார்.

இவர் இப்படி தன்பக்கல் அவகாஹிக்கக்கண்ட எம்பெருமான் "இப்போது இவர்க்கு நம்மிடத்து உண்டான பற்று மற்ற விஷயங்களிற்போலல்லாமல் ஸம்பந்த வுணர்ச்சியை முன்னிட்டுப்பிறந்ததாக வேணும்; இல்லையேல் இப்பற்று இவர்க்கு நிலைநிற்காதொழியினும் ஒழியும்" என்றெண்ணி எல்லாப் பொருள்களையும் விளக்குவதான திருமந்த்ரத்தையும் தனது ஸௌசீல்யம் முதலிய திருக்குணங்களையும் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லை நிலமான திவ்ய தேசங்களையும் ஆழ்வார்க்குக் காட்டிக் கொடுக்க, அவரும் "வாடினேன் வாடி" என்று தொடங்கி எம்பெருமானுகந்தருளின இடமே பரமப்ராப்யமென்று அநுபவித்தார்.

இங்ஙனம் அநுபவித்த ஆழ்வார்க்கு இவ்வநுபவம் நித்யமாய்ச் செல்லுகைக்காக இவரைத் திருநாட்டிலே கொண்டுபோக வேணுமெனக் கருதிய எம்பெருமான் ஸம்ஸாரத்தில் இவர்க்கு ஜிஹாஸை பிறக்கும்படி அதனுடைய தண்மையை அறிவிக்க, அறிந்தவிவர் அஞ்சி நடுங்கி "மாற்றமுள" என்னுந் திருமொழியிலே "இருபாடெரி கொள்ளியினுள் எறும்பேபோல்" "பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போல்" "வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே" என்று தமது அச்சத்திற்குப் பலவற்றை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிக் கதறினார்.

இப்படி இவர் கதறிக்கதறி "பணியாயெனக் குய்யும்வகை பரஞ்சோதீ!" என்றும், "அந்தோ வருளாய் அடியேற்குன்னருளே" என்றும் சொல்லி வேண்டின விடத்தும், சிறுகுழந்தைகள் பசிபசியென்று கதறியழுதாலும் அஜீரணம் முதலியவை கழிந்து உண்மையான பசி உண்டாமளவும் சோறிடாத தாயைப்போலே, எம்பெருமான் 'இவர்க்கு முற்ற முதிர்ந்த பரமபக்தி பிறக்குமளவும் நாம் முகங்காட்டுவோமல்லோம்' என்று உதாஸீநனாயிருக்க; ஒரு க்ஷணமும் அவனைப் பிரிந்திருக்கமாட்டாத ஆழ்வார்—மிகுந்த தாஹங் கொண்டவர்கள் நீரிலே விழுந்து நீரைக் குடிப்பதும் நீரை வாரி மேலே இறைத்துக்கொள்வதும் செய்யுமாபோலே, அவ்வெம்பெருமானை வாயாலே பேசியும் தலையாலே வணங்கியும் நெஞ்சாலே நினைத்தும் தரிக்கப்பார்த்தார்—திருக்குறுந்தாண்டகமென்னும் திவ்யப்ரபந்தத்திலே.

தாஹம் அளவற்றதாயிருக்கச் சிறிது குடித்த தண்ணீர் த்ருப்தியை உண்டுபண்ணாமல் மேலும் விஞ்சிய விடாயைப் பிறப்பிக்குமாபோலே, இவர் திருக்குறுந்தாண்டகத்தில் அநுபவித்த அநுபவம் பழைய அபிநிவேசத்தைக் கிளப்பிப் பெரிய ஆர்த்தியை உண்டாக்கவே, "**நின்னடியிணை பணிவன் வருமிடரகல மாற்றோ வினையே**" என்று ஆர்த்தராய்ச் சரணம் புகுந்தார்—திருவெழுகூற்றிருக்கை யென்னும் திவ்ய ப்ரபந்தத்திலே.

அப்போதும் எம்பெருமான் இவருடைய அபேக்ஷிதத்தைச் செய்து தலைக்கட்டிற்றிலன்; நம்போலியரை வாழ்விக்க இவ்வாழ்வார் முகமாக இன்னுஞ்சில திவ்ய ப்ரபந்தங்களை வெளியிடவேணுமென்ற அவாவினால் வாளா இருந்திட்டான். சக்ரவர்த்தி திருமகன் ஸமுத்ர ராஜனைச் சரணம் புகுந்து வழிவிடவேண்டின விடத்தும் அக்கடலரையன் இறுமாப்பையே பாராட்டி முகங்காட்டாமல் அலக்ஷியஞ் செய்து கிடக்க, பெருமாள் சீறிச் சிவந்த கண்ணினராய் "సాగరం శోషయిష్యామి — చాపమానయ సౌమిత్రే! — పద్భ్యాం యాన్తు ప్లవంగమాః" [ஸாகரம் சோஷயிஷ்யாமி—சாபமாநய ஸௌமித்ரே—பத்ப்யாம்யாந்து ப்லவங்கமா:] 'இதோ இக்கடலை வற்றச்செய்துவிடப்போகிறேன்—லக்ஷ்மணா! சார்ங்கவில்லைக் கொண்டுவா—வாநர முதலிகள் காலாலே நடந்து செல்லட்டும்—ஒரு க்ஷணத்திலே இக்கடல் படுகிறபாடு பாருங்கள்' என்றருளிச் செய்து ஸமுத்ரராஜனை

அழிக்க முயன்றாப்போலே, இவ்வாழ்வாரும் 'நமது அபேக்ஷிதத்தை நிறைவேற்றாத எம்பெருமான் ஏதுக்கு? அவனுடைய ஸ்வரூபகுண விபூதிகளையும், அவன் உகந்து எழுந்தருளியிருக்கு மிடங்களையும் அழித்து விடுவோம்' என்று அவற்றை அழிக்கப்பார்க்கிறார் இச்சிறிய திருமடலிலே.

இஃது ஆழ்வார் தாமான தன்மையிலே யிருந்து பேசுகின்ற பிரபந்தமன்று; க்ருஷ்ணாவதாரத்தில் குடக்கூத்திலே அகப்பட்டு அன்னவனை அநுபவிக்கப் பெறாது வருந்தி மடலெடுக்கத் துணிந்த ஒரு பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக்கொண்டு அவளுடைய பாசுரத்தாலே தனது தசையை வெளியிடும் பிரபந்தம் இது.

ஆழ்வார்க்குப் பிராட்டிதன்மை நேர்தற்குக் காரணம்—புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்உலகமடங்கப் பெண்தன்மையதாதலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்த்ர்யமின்மையும் பாரதந்திரியமும் முதலியன.

நாயகன் வேட்டைக்குப் புறப்பட்டானாய், நாயகியும் தோழியுமாகப் பூக்கொய்து விளையாடவென்று புறப்பட்ட வளவிலே ஒரு வ்யாஜத்தாலே தோழியும் பிரிந்த ஸமயத்திலே நாயகனும் தெய்வவசமாக அங்கே வந்துசேர, அங்கே அவனோடே கண்கலவியே கூட்டக்கூடி, ஊழ்வினை பிரித்தலால் உடனே பிரிவும் நேர்ந்திட, அந்த நாயகனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாத நாயகி அவனோடு கூடுதற்காகச் செய்யும் ஸாஹஸப்ரவ்ருத்திதான் **மடல்** எனப்படுவது. இஃது எம்பெருமானுடைய ஸ்வரூபகுண விபூதிகளை அழிப்பதாகச் சொன்னது எங்ஙனே யெனில்;-(மடலூருகையாவது-) நாயகனை ஒரு படத்திலே எழுதி, வைத்த கண்வாங்காமல் அதனைப் பார்த்துக்கொண்டு புஷ்பம் சந்தனம் முதலிய போகத்துக்கு உரிய வஸ்துக்களை விஷமாக உதறித்தள்ளி ஊணும் உறக்கமும் உடம்புகுளிப்பது மின்றியே பனைமட்டையைக் கையிலே எடுத்துக்கொண்டு அதனால் உடம்பை மோதிக்கொண்டு தலைமயிரை விரித்துக்கொண்டு "இன்ன படுபாவி என்னைக் காக்கமாட்டாதே கைவிட்டான்; அவன் கண்ணற்றவன்; அவனிலும் விஞ்சின கொடியன் இல்லை; பல ஸ்தலங்களிலே அவன் ஸந்நிதிபண்ணி அடியாரைக் காக்கின்றானென்பதும், ராமக்ருஷ்ணாதி அவதாரங்களினால் பலரைக் காத்தான் என்பதும் முழுப்பொய்யான பேச்சுக்கள்"

என்று தெருவேறக் கதறிக்கொண்டு கேட்டாரெல்லாரும் நடுங்கும் படியும் இரங்கும்படியும் திரிந்துழல்வதுதான் மடலூருகையாவது. அப்படிப்பட்ட கொடிய காரியத்தைச் செய்வதானது எம்பெருமானுடைய ஸ்வரூபாதிகளை அழிக்கை என்னத்தட்டுண்டோ? ஒருவனுக்கு உள்ளவற்றை இல்லையென்பதிறே அழிக்கையாவது.

இப்படி கதறிக்கொண்டு தெருவிலே புறப்படுவதற்கு ப்ரயோஜனம் யாதெனில்; இந்த ஸாஹஸ ப்ரவ்ருத்தியைக்கண்டு ராஜாக்களாயுள்ளவர்கள் இவ்வார்த்தியைப் பொறுக்கமாட்டாத கருணையினாலே இருவரையும் கூட்டிவைப்பர்கள்; உறவு முறையாராவது கூட்டிவைப்பர்கள்; தோழிமாராவது கூட்டிவைப்பர்கள்; பழிக்கு அஞ்சி நாயகனேயாவது வந்து கூடுவன்; இவை யொன்றுமில்லையாகில் நாயகிதான் முடிந்து பிழைத்துப் போவள்—இவையாயிற்று மடலூர்தற்குப் பிரயோஜநங்கள்.

ஆழ்வார் இப்படி எம்பெருமானைப் பழித்துக்கொண்டு ஸாஹஸம் தோற்றத் தெருவிலே கிளம்பினாரோ? எனில்; இல்லை; "மடலூர்வன், மடலூர்வன்" என்று சொல்லி அச்சமுறுத்தின மாத்திரமேயன்றி அதை முடிய நடத்தினபாடில்லை. நம்மாழ்வாரும் "மாசறு சோதி" என்ற திருவாய்மொழியிலே, "தோழீ! உலகு தோறலர் தூற்றி ஆம் கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே" என்றும், "யாம் மடமின்றித் தெருவு தோறயல் தையலார் நாமடங்காப் பழிதூற்றி நாடுமிரைக்கவே-யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல்தண் ணந் துழாய் மலர் கொண்டு சூடுவோம்" என்றும் மடலூரப் புகுவதாக அச்சமுறுத்தினாரே யன்றி, அதனை அநுஷ்டாநபர்யந்தமாகச் செய்திலரிறே.

புருஷன் ஸ்த்ரீகளைக் குறித்து மடலூரலாமேயொழிய, ஸ்த்ரீ புருஷனைக் குறித்து மடலூரலாகாதென்று தமிழ்நெறியில் ஒரு வரம்பு கட்டப்பட்டிருக்கிறது; "கடலன்ன காமத்தராயினும் மாதர், மடலூரார் மற்றையார்மேல்" என்றார் தமிழர்; அப்படி யிருக்க, ஆழ்வார் பிராட்டி தசையை அடைந்து மாதரான பின்பு மடலூரப் புகுதல் பொருந்துமோ? என்று இங்கே ஒரு சங்கை உண்டாகக்கூடியதே; இதற்கு இவ்வாழ்வார்தாமே மேல் பெரிய திருமடலில், "மானேக்கின் அன்னநடையார் அலரேச

ஆடவர்மேல், மன்னு மடலூராரென்பதோர் வாசகமும், தென்னுரையில் கேட்டறிவதுண்டு, அதனையாம் தெளியோம் மன்னும் வடநெறியே வேண்டினோம்" என்று ஸமாதாநம் அருளிச்செய்துள்ளமை அறியத்தக்கது. மடலெடுக்கை யென்பது ஆசைமிகுதியினால் தன்னடையே உண்டாவதொரு ப்ரவ்ருத்தி; ஆசையை வரம்பிட்டுக் காக்க ஆராலும் முடியாது; அரசராணைக்குக் கட்டுப்படுமோ ஆசை! வேலியடைத்தால் நிற்குமோ வேட்கை? அளவு கடந்த வேட்கையின் காரியமாக விளையக்கடவதான மடலூருகையை ஆண்கள் தாம் செய்யலாம், பெண்கள் செய்யலாகாதென ஒரு வரம்புகட்டுவதானது ப்ரேமஸ்வபாவத்தின் போக்கை அறியாதவர்களுடைய செயலாமத்தனை யென்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

அஃது இருக்கட்டும்; "எம்பெருமானுக்குத் திருவுள்ளமானபோது நம்மை நோக்கியருள்வான், நாம் பதறவொண்ணாது" என்று அநுஸந்தித்து குணாநுபவமே போதுபோக்கா யிருக்க வேண்டியதன்றோ ஸ்வரூப ப்ராப்தம்; அங்ஙனமிராமல் தாம் பதறி ஒரு அதிப்ரவ்ருத்தி செய்ய நினைக்கைதானும் அவத்யமன்றோ! அதிலும் ஸ்ரீ வைஷ்ணவ ஸந்தானத்தில் சிறந்த மெய்யடியார்களென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் இப்படி மடலூர்வேனென்றல் முதலியன பேசுதல் மிகவும் பொல்லாங்கன்றோ? என்னில்; அன்று; ப்ராப்ய வஸ்துவில் ப்ராவண்யாதிசயத்தினால் உண்டாகிற ப்ரவ்ருத்தியேயன்றி எம்பெருமானுக்குக் கெடுதலை விளைக்க வேணுமென்கிற கெட்ட எண்ணத்தினால் உண்டாகிற ப்ரவ்ருத்தியல்ல; ப்ரேம பரவசர்க்கு இது அவத்யத்தை விளைக்கக்கூடியதன்று. ஆனால், 'இது கலக்கத்தினால் செய்யும் செயல்தானே, அஜ்ஞாந மூலமாக வருமவை ஒன்றும் ஆதரிக்கத் தக்கதன்றே' எனின்; "ஞானங்கனிந்த நலம்" என்றபடி ஞானபரிபாக ரூபமான பக்தியின் காரியமாக ஸம்பவிக்கின்ற ப்ராப்தாப்ராப்த விவேக விரஹத்தால் வரும் ப்ரவ்ருத்தி விசேஷங்கள் எல்லாம் மிகவும் ஆதரிக்கத் தக்கனவேயாம். கருமமடியான அஜ்ஞானத்தினால் வருமவையே ஹேயம் என்று கொள்ளக்கடவது.

ஆனாலும், சேதநனிடத்து ஒருவகையான ப்ரவ்ருத்தியையும் ஸஹியாத ஸித்தோபாயத்தின் கார்யகரத்வத்திற்கு இந்த அதிப்ரவ்

ருத்தி ப்ரதிபந்தகமாக மாட்டாதோ? என்னில்; இந்த அதிப்ரவ்ருத்திதானும் ஸித்தோபாயமான எம்பெருமான் பண்ணின க்ருஷியின் பயனெனக் கருதத்தக்கதாம். "மயர்வற மதிநலமருளினன்" "பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த, காரமர்மேனி நங்கண்ணன்" என்று—இப்படிப்பட்ட அதிப்ரவ்ருத்திக்கு ஹேதுவான பக்தியைப் பிறப்பிக்குமவனும் வளரச் செய்பவனும் அவ்வெம்பெருமான்றானுகவேயன்றோ சொல்லப்பட்டுள்ளது. ஆகையாலே பக்திபாரவச்யப்ரயுக்தமான நோன்பு நோற்கை, மடலூருகை முதலான அதிப்ரவ்ருத்திகளை உபாயபலமென்று பூர்வாசார்யர்கள் ஸித்தாந்தீகரித்தருளினர்.

அன்றியும், பலனைக் கடுகப் பெறவேணுமென்ற விரைவின் மிகுதியினால் கண்ணுஞ்சுழலையிட்டு இத்தலைபடுகிற அலமாப்பெல்லாம் "நம்மை ஆசைப்பட்டு இப்படி படப்பெறுவதே!" என்று அவன் முகம் மலருகைக்கு உறுப்பாகையாலே நோன்பு நோற்கை மடலெடுக்கை முதலான அதிப்ரவ்ருத்திகளெல்லாம் அவனுடைய முகமலர்த்திக்காகப்பண்ணும் கைங்கரியத்தோடொத்து உபேயத்தில் அந்தர்ப்பூதமாய் விடுமென்றே அறுதியிடத்தக்கது. நிற்க.

திருமடல் ஒரே பாட்டு.

இச்சிறியதிருமடல் இலக்கணமுறைமைப்படி ஒரேபாட்டாகக் கொள்ளத்தக்கது. இதனை எஎ௨ பாட்டாகக் கணக்கிட்டார் அப்பிள்ளையாசிரியர்; நாற்பது பாட்டாகக்கணக்கிட்டார் ஸ்ரீவேதாந்ததேசிகன். அவர்கள் இப்படி பலபாட்டுக்களாகப் பிரித்துக்கொண்டது இலக்கண முறைமைக்கு இணங்குவதல்ல. மஹான்களாகிய அவ்வாசிரியர்கள் இலக்கண நெறிக்கு முரண்படுமாறு அங்ஙனே பிரித்துக்கொண்டதற்குக் காரணம் இன்னதென்பதை மேலே கூறுவோம். இஃது இலக்கண முறைமைப்படி ஒரேபாட்டென்பதை இப்போது விளக்கப் புகுகிறோம்;—

ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும்பெற்று, காய்ச்சீரும் மாச்சீர்விளச்சீர்களும் இருவகை வெண்டளைகளுங் கொண்டு மற்றைச்சீரும் தளையும் பெறாமல், நாள் மலர் என்ற ஓரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது, காசு பிறப்பு என்ற ஈரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது முடிந்து, ஒரு விகற்பத்தாலாயி

னும் இருவிகற்பத்தாலாயினும் வருவது வெண்பா என்று பொதுப் படக்கூறி, இரண்டடியால் வருவது குறள்வெண்பா வென்றும், மூன்றடியால் வருவது சிந்தியல் வெண்பா வென்றும், நான்கடிக ளாய் இரண்டாமடியின் இறுதிச்சீர் முதலிரண்டடிகளின் எதுகை யையுடைய தனிச்சொல்லாய் வரநிற்பது நேரிசை வெண்பா வென் றும், நான்கடிளாய்த் தனிச்சொல் இன்றி வருவது இன்னிசை வெண்பா வென்றும், ஐந்தடிமுதல் பன்னிரண்டடியளாவும் வருவது பஃறொடை வெண்பா வென்றும், பன்னிரண்டடிக்கு மேற்படின் கலிவெண்பா வென்றும் விசேஷித்து யாப்பிலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளமையால் திருமடல்களிரண்டையும் கலி வெண்பா வாகக்கொண்டு ஒவ்வொரு மடலேயும் ஒவ்வொரு பாட்டாகவே கொள்ளவேண்டும். திருமடல்களிரண்டிலும் முற்றும் ஓரே எதுகை யாக அமைந்தமையும் ஈற்றடி முச்சீராக முடிந்துள்ளமையும் நன்கு நோக்கத்தக்கது.

சங்கத்துச் சான்றோர் இயற்றிய பன்னிரு பாட்டியல் என்ற இலக்கணநூலில் இனவியலில் மடலிலக்கணஞ் சொல்லுமிடத்து, "பாட்டுடைத் தலைமகனியற்பெயர்க் கெதுகை, நாட்டிய வெண் கலிப்பாவதாகி......காமங் கவற்றக் கரும்பனைமடன்மா, ஏறுவராட வர் என்றனர் புலவர்." என்றதும், "இவ்வாறு வந்தன மங்கை யர்கோன் அருளிச்செய்த பெரிய திருமடல் சிறிய திருமடல் என் பன" என்று அதன்கீழ் விவரணங் காட்டியிருப்பதும் அறியத் தக்கன.

"அறம்பொருள் வீடெனு மம்முக்கூற்றின் திறங்கடிந் தரிவையர் திருத்துறு மின்பம் பயனெனக் கலிவெண் பாவாற் றலைவன் பெயரெதுகையினிற் பேசுதல் வளமடல்." என்ற இலக்கண விளக்கமும் அறியத்தக்கது.

வச்சணந்திமாலை யென்னும் வெண்பாப் பாட்டியற் செய்யு ளியலில் மடலிலக்கணஞ்சொல்லவந்த "உற்றவறம்பொருள் வீடெள்ளியுயர்த்தின்பம், பொற்றொடி காதற்பொருட்டாகப் — பெற்றி, யுரைத்த கலி வெண்பா மடலிறைவனெண்பேர், நிறைத்த வெதுகை நிறுத்து" என்ற வெண்பாவும் உணரத்தக்கது. இன் னும் இவ்விஷயத்தைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாமென்று இவ்வளவிலே நிற்கின்றோம்.

ஆகவே திருமடல்களைப் பலபாட்டுகளாகப் பிரித்தல் இலக்கண முறைமைக்கு எவ்வகையாலும் இணங்காதாயினும், வேதாந்த தேசிகனும் அப்பிள்ளையும் பலபாட்டாகப் பிரித்துக்கொண்டது ஔசித்யம் (𑌔𑌚𑌿𑌤𑍍𑌯𑌂) என்கிற பிரமாணத்தின்படி ஒருவாறு பொருந்தக்கூடும். அதாவது - ஆழ்வார்களருளிய தமிழ் வேதத்திற்கு நாலாயிரம் என்ற திருநாமம் நாடெங்கும் வழங்கி வந்திருக்கின்றது; ஏற்றக்குறைவின்றிச் சரிசமமாக நாலாயிரம் பாட்டுக்கள் உள்ளனவாகக் காட்டவேணுமென்கிற திருவுள்ளம் அவ்வாசிரியர்கட்கு உண்டாயிற்று; ஸ்ரீ தேசிகன் இராமாநுச நூற்றந்தாதியையுஞ் சேர்த்து நாலாயிரமாகக் கணக்கிடத் திருவுள்ளம் பற்றினர்; அப்பிள்ளை அந்த நூற்றந்தாதியைத் தவிர்த்து நாலாயிரமாகக் கணக்கிடக் கருதியருளினர். திருமடல்களை ஒவ்வொரு பாட்டாகக் கொண்டால் இவர்களுடைய திருவுள்ளம் நிறைவேறுதற்கு அவகாசமின்றியிருந்தது. இரண்டு திருமடல்கள்தவிர மற்ற திவ்ய ப்ரபந்தங்கள் இருபத்திரண்டில் ௩௭௭௪ பாட்டுக்கள் மாத்திரமே தேறுகின்றன. இராமாநுச நூற்றந்தாதியின் நூற்றெட்டுப் பாட்டுக்களையுங் கூட்டிக்கொண்டால் ௩௮௮௨ பாட்டுக்கள் தேறுகின்றன. ஆகவே, நாலாயிரத்திற்கு நூற்றுப்பதினெட்டு பாட்டுக்கள் தேவையாயின. அதற்காகச் சிறிய திருமடலை நாற்பது பாட்டாகவும் பெரிய திருமடலை எழுபத்தெட்டு பாட்டாகவும் பிரித்துக் கொண்டு பூர்த்தி செய்தருளினர் தேசிகன். நூற்றந்தாதியையொழிய நாலாயிரம் கணக்கிடத் திருவுள்ளங்கொண்ட அப்பிள்ளைக்கு ௨௨௬ பாட்டுக்கள் தேவையாயின. அதற்காக அவர் சிறிய திருமடலை ௭௭½ பாட்டாகவும், பெரிய திருமடலை ௧௪௮½ பாட்டாகவுங்கொண்டு கணக்கிட்டுப் பூர்த்தி செய்தருளினர்.

[“ஸ்திதஸ்ய கதிச் சிந்தநீயா”] உள்ளதற்கு ஒருவழி விட வேண்டும் என்ற நீதியை யடியொற்றி இங்ஙனே ஒரு ஸமாதாநம் காட்டினோமென்க.

இலக்கணப்படி திருமடலை ஒரே பாட்டாகக் கொள்வதே ஏற்கும். இப்படியாகில், இருநூற்றுச்சொச்சம் பாட்டுக்கள் குறைதலால் நாலாயிரம் என நாடெங்கும் வழங்குவது சேருமாறு எங்ஙனே யென்னில்; உலகத்தில் ஒரு பெரிய தொகைக்குச் சில எண்கள் குறைந்தாலும் பெரிய தொகையை யிட்டே வழங்குவதுண்டு;

நாலாயிரக்கணக்குக்கு நூறு இருநூறு குறைந்தாலும் நாலாயிரமென்றே வழங்கலாம். [உதாரணம்.] நம் ஆழ்வார்கள் "வாணனாயிரந் தோள் துணித்த" என்றும் "இண்டவாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த" என்றும் அருளிச்செய்துள்ளமை அனைவருமறிவர்; பரமசிவன் பிரார்த்தனையால் பாணாஸுரனை $ நான்கு கைகளோடும் உயிரோடும் எம்பெருமான் விட்டருளினனென்பது ஸ்ரீ பாகவதாதிகளில் ப்ரஸித்தம். இனி, கீழ்க்குறித்த ஆழ்வார் பாசுரங்களுக்கும் இப்புராண வரலாற்றுக்கும் ஐககண்டியம் பண்ணப்புக்கால், ஆயிரத்துக்கு நாலைந்து குறையினும் ஆயிரமென்றே சொல்லலாமென்று அனைவரும் அங்கீகரிக்கவேண்டுமே. இனி திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டாயிருக்க, ஆழ்வார் தாமே "குருகூர்ச்சடகோபன் சொன்ன ஓராயிரம்" என்று பலவிடங்களிலும் அருளிச்செய்தது சேரும்படி எங்ஙனே? பெரிய திருமொழி க0அச பாட்டாயிருக்க, "பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரம்" என்றது எங்ஙனே? நூற்றெட்டுப் பாட்டுக்களமைந்த பிரபந்தத்தை "இராமாநுச நூற்றந்தாதி" என்கை சேரும்படி எங்ஙனே? ஆயிரத்தெட்டு ச்லோகங்களமைந்த ஸ்தோத்ரத்தைப் பாதுகாஸஹஸ்ரம் என்றும், எழுபத்தினான்கு ச்லோகங்களமைந்த ஸ்தோத்ரத்தை யதிராஜ ஸப்ததி என்றும் சொல்வது எங்ஙனே? என்றிப்படி பலவற்றையு மெடுத்துக்காட்டிக் கேட்பார்க்கு—ஆயிரத்துக்கு நூறு ஐம்பது மிகுந்தாலும் ஆயிரமென்றே வழங்கலாமென்றும் நூற்றுக்குப் பத்து எட்டு மிகுந்தாலும் நூறென்றே வழங்கலாமென்றும் மறுமொழி யுரைத்தலில் மயங்குவாரில்லையே.

இவ்வுதாஹரணங்களால், ஸ்வல்பம் ஏற்றத்தாழ்வு அகிஞ்சித்கரம் என்பது நன்கு விளங்கும். இவ்வகையில் நாலாயிரமென்ற வ்யவஹாரம் நன்கு பொருந்தத் தடையில்லையென்றுணர்க.

இங்ஙனம்:

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கரார்யதாஸன்.

$ ஹரிவம்சம் விஷ்ணு பர்வத்தில் கஅரு - ஆவது அத்தியாயத்தில் இரண்டு கைகளோடு விட்டருளினதாக வரலாறு காண்கிறது; பிரகிருதத்தில் இரண்டு வகையும் துல்யம்.

ஸ்ரீ:

சிறிய திருமடலின் தனியன்.

(பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்தது.)

நேரிசை வெண்பா.

முள்ளிச் செழுமலரோர் தாரான் முளைமதியம்
கொள்ளிக்கென் னுள்ளங் கொதியாமே—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்.

பதவுரை.

செழு முள்ளி மலர் ஓர் தாரான்	செழுமை தங்கிய முள்ளி மலர்களினாலாகிய ஒப்பற்ற மாலையை அணிந்து கொண்டிருப்பவரும்,
வள்ளல்	(ஸ்ரீஸூக்திகளை அளவறத் தந்தருளுகையாலே) மிக்க உதாரரும்,
திரு ஆளன்	ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை ஆள்பவரும்
மரு வாளன்	பொருந்திய வாளையுடையவரும்
கார் கலியை வெட்டி	அஜ்ஞாநதோஷத்தை ஒழித்தவருமான
சீர் கலியன்	ஸ்ரீ திருமங்கையாழ்வார்
முளை மதியம் கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே	உதிக்கின்ற சந்திரனாகிய கொள்ளியிலே என் நெஞ்சு பரிதபியாதபடிக்கு
மடல் தந்தான்	திருமடல்பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

—***—முளைத் தெழுகின்ற சந்திரனை விரஹிகள் கண்டவாறே 'இவன் சந்திரனல்லன், சண்டனேயாவன்' என்று நிச்சயித்துக் கொள்ளியைக் கண்டாற்போலே குடல் குழம்பிக் கொதிப்பர்கள்; அப்படி கொதிக்க வேண்டாதபடி திருமங்கையாழ்வார், விரஹதாபஹரமான இத்திருமடலெனும் திவ்யப்பிரபந்தத்தைத் தந்தருளி

ணூர் என்கிறது. உலகத்தில் விஷயாந்தரங்களில் ஈடுபட்டவர்கள் தம் அபிமத விஷயத்தைப் பிரிந்து "𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌕𑌰𑌾𑌯𑌤𑍇" [சந்த்ரச் சண்டகராயதே] என்று சந்திரனைக்கண்டு எப்படி தாபமெய்துவார்களோ, அப்படியே பகவத் விஷயத்தி லீடுபட்டவர்களும் எம்பெருமானாகிற தலைமகனைப் பிரிந்தகாலத்து, சந்திரனைக் கொள்ளியாகவே கருதித் தபிக்கப் பெறுவர்களென்பதை "போந்த வெண்திங்கள் கதிர்சுடமெலியும்" என்ற இவ்வாழ்வார் பாசுரத்தாலும், "மேவுதண்மதியம் வெம்மதியமாலோ" என்ற நம்மாழ்வார் பாசுரத்தாலும் அறிக. இங்கு முளைமதியமென்று சந்திரனை எடுத்துக்கூறியது—விரஹத்தில் தாபத்தை விளைக்கவல்ல * மல்லிகை கமழ் தென்றல்முதலிய மற்றெல்லாப் பொருள்கட்கும் உபலக்ஷணமென்க. இனி நாம் எம்பெருமானைப் பிரிந்து சந்திரன் முதலிய பல பாதக (𑌬𑌾𑌧𑌕) பதார்த்தங்களினால் வருந்தவேண்டாதபடி ஆழ்வார் திருமடலை நமக்கு உபகரித்தார் என்றவாறு. எனவே, இத்திருமடலை ஒருகால் அநுஸந்தித்தவாறே எம்பெருமான் அஞ்சி நடுங்கி அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து முகங்காட்டியருள்வானாகையாலே பகவத் விரஹமும் விரஹதாபமும் ஒன்றும் நமக்கு நேரிட ப்ரஸக்தியில்லை யென்றதாயிற்று.

திருமங்கையாழ்வாரைப்போலவே கனத்த பகவத்காமமுடையவரால் இப்பாசுரம் அருளிச் செய்யப்பட்டதாகக் கொள்க.

முள்ளிச் செழுமலரோர்தாரான்—கலியனுக்கு முள்ளிப்பூமாலை ஜாதிக்கு ஏற்ற மாலை போலும். இப்போதும் அர்ச்சாவதாரத்தில் (திருநகரியில்) முள்ளிச் செழுமலர்த்தார் வடிவமான திவ்யாபரணம் ரத்ந மயமாக உள்ளமை உணர்க.

தாமரை என்னும் பொருளதான முளரி என்னுஞ் சொல் முள்ளி யென மருவிற்றென்று கொண்டு தாமரை மாலையை யணிந்துள்ளவரென்று பொருள் கூறுவாருஞ் சிலருளர்.

"மலரோதாரான்" "மலரோர்தாரான்" "மலரோன் தாரான்" என்பன பாட பேதங்கள்.

மதியம்=அம்—சாரியை. [கார்க்கலியை வெட்டி.] கார்—இருள்; அதாவது அஜ்ஞானம். வெட்டி என்பதை வினையெச்சமாகக் கொண்டு உரைத்தலு மொன்று.

தனியன் உரை முற்றிற்று.

விளையாட்டிலே ஊன்றியிருந்தேன்; இருக்கையில், தாமரைக் கண்ணனென்று பேர்பெற்றானொருவன் அனைவரும் மகிழப் பறை யறைந்துகொண்டு "இக்கூத்துக்குத் தப்பிப்பிழைக்கும் பெண்டி ரும் இத்தெருவே உண்டோ?" என்று சொல்லிக்கொண்டு குடக் கூத்தாடா நின்றமைகண்ட பெண்டிர்களெல்லாரும் "அடி பரகால நாயகி! குடக்கூத்துக்காண நீயும் வரமாட்டாயோ?" என்ற ழைக்க, போராத காலம் வலிதாயிருந்தபடியால் நானும் சடக்கென வெழுந்து அங்கே சென்றேன்;

சென்றதும் மேனிநிறமிழந்தேன், கைவளைகள் கழன்றொழி யப் பெற்றேன்; ப்ரியஹிதபரர்கள் சொல்லுமதைக் காதுகொடுத் துங் கேட்கமாட்டாத நிலைமையளாயினேன்; அறிவென்பது அடி யோடே போயிற்று; சரீரம் ஒழிந்தால் ஆறியிருக்கலாமே; அது வும் ஒழிந்ததில்லை; பேதைமை மிக்கது; இங்ஙனேயான என்னை என்தாய் கண்டு வருந்தி எப்படியாகிலுமென்னைத் தெளிவிக்க வேண்டி பாகவத ஸ்ரீபாததூளியைக்கொண்டு காப்பிட்டாள்; செங் குறிஞ்சிமாலையை நிரூபகமாகவுடைய சாஸ்தா என்னும் தேவ தாந்தரத்திற்கு ஓர் அஞ்ஜலியும் செய்தாள்; அத்தனை செய்தும் என் மனோவியாதி தீரவில்லை; பிடித்த பைத்தியம் கழியவில்லை; போன மேனிநிறம் மீண்டதில்லை;

இங்ஙனமாக நான் தளர்வுற்றிருக்கும்படியைக்கண்ட சில பழங்கதை யுணர்ந்த பாட்டிமார்கள் வந்து சேர்ந்து 'ஐயோ, குறி சொல்லுங் குறத்தியை வரவழைத்துக் குறிகேட்கலாமே; நோய்க்கு நிதானம் வெளிப்படுமே; இது கைகண்ட உபாயமாயிற்றே!' என்று சொல்ல; அவ்வளவிலே ஒரு குறத்தி தானாகவே வந்து சேர்ந்து தைவாவிஷ்டையாகி ஒரு சிறு முறத்திலிருந்து சிலநெற்களையெடுத் துக் குறி பார்த்து வேர்வையடைந்து விதிர்விதிர்த்து மயிர்க்கூச் செறிந்து கையைமோந்துபார்த்து நாமமாயிரமேத்த நின்ற நாராய ணனைச்சிந்தித்து அவனது காளமேகத்திருவுருவையும் வலங்கை யாழி யிடங்கைச்சங்கையும், தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலை யையும் அபிநயித்துக்காட்டி, பிறகு வாய்திறந்து "அம்மனைமீர்! நீங் கள் சிறிதும் அஞ்சவேண்டா; ஏதோ வொரு புதுத்தெய்வம் உங் கள் பெண்ணைத் தீண்டி நோய்செய்யவில்லை; நோய்செய்த தெய் வத்தை நானறிந்தேன்; உங்கட்குந் தெரியச் சொல்லுகிறேன் கேளுங்கள்;

இவ்வுலகத்தை அளந்தவனும், இலங்கையைப் பாழ்படுத்தின வனும், குன்றமெடுத்துக் கல்மழை காத்தவனும், அமரர் அமுத முண்ணக் கடல் கடைந்தவனும் எவனோ அவன்—ஊரிலுள்ள பசுக் களையெல்லாம் மேய்த்தும் உலகங்களை யெல்லாம் பிரளயங் கொள் ளாதபடி ஒருகால் திருவயிற்றிலேவைத்து நோக்கியும் பின்பு வெளி யிட்டும் இத்தனை செய்தும் த்ருப்திபெறுதவனாய் இன்னும் தனது குணங்களை விளங்கச்செய்யவேண்டித் திருவாய்ப்பாடியிலே வெண் ணெய் களவுகண்டு அக்குற்றத்திற்காகக் கண்ணிக்குறுங் கயிற்றால் உரலோடே கட்டுண்டவனாயும், காளியநாகத்தின் கொழுப்பை யடக்கினவனாயும்; சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும் அறுத்து அவளது தமையனான கரனைப் போர்க்களத்திலே நரக வேதனையநுபவிக்குமாறு பங்கப்படுத்திக்கொன்றொழித்தவனாயும், பிராட்டிக்காக இராவணனது தலைகளை யறுத்தொழித்தவனாயும், நரசிங்கவுருக்கொண்டு இரணியனுடலைப் பிளந்தவனாயும், மாவலி கையில் நீரேற்று மூவுலகளந்தவனாயும், கூர்மரூபியாக மந்தரகிரி யைத்தாங்கி வாசுகியினால் கடலைக் கடைந்தவனாயும், திருத்துழாய் மாலையை அணிந்துள்ளவனாயும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு முதலை யால் நேர்ந்த இடரைக்களைந்தவனாயும், ஆயிரம் திருநாமமுடைய னாயும் ப்ரஸித்தனாயிரா நின்றானன்றோ; அப்பெருமான்தான் உங் கள் பெண்ணை இப்பாடுபடுத்தினவன்" என்று கூறினள்;

அங்ஙன் சொல்லக்கேட்ட என் தாய் 'அம்மா! வேறு தேவ தாந்தரமொன்றுமன்றே இந்நோய் செய்தது; அவ்வெம்பெருமான் தானே; அவனேயாகில் தன்னடியாளான இவளுக்குத் திருத்து ழாய்ப் பிரசாதம் தந்தருளாதொழிவனோ; தந்தே தீருவன்' என்று சொல்லிவிட்டு விசாரமற்று ஸ்வகார்ய பரையாயொழிந்தாள்;

அவன் குடக்கூத்தாடும்போது அவனது காரார்ந்த திருமேனி யைக் கண்டதுமுதல் நான் நிலைதடுமாறி வாய்பிதற்றி விகாரமுற் றேன்; இந்நிலைமையிலே வாடைதானும் வந்து வீசி விரஹத்தால் மெலிந்து கிடக்குமென்னுடலைத் துன்பப்படுத்துந் திறம் சொல்லி முடியாது; கையிலே மடலைக்கொண்டு தெருவேறப் புறப்படத் துணிவுடையேனாயினும் யாரேனுஞ் சிலர் நிறக்கேடான வார்த்தை களைச் சொல்லிப் பழிப்பர்களே யென்றிட்டு அங்ஙன் புறப்படாது வாளா இருந்திட்டேன்;

இனி அவனுக்குத் தூது விடுவோமென்று பார்த்து வேறொரு அநுகூலரையுங் காணுமையாலே நெஞ்சுதன்னையே அழைத்து 'நெஞ்சே! நீ எனக்காக மணிவண்ணன் பக்கலிலே சென்று திருத்துழாய்ப் பிரசாதம் கேள்; தருகிறேன் தாமாட்டேனென்பதிலொன்றை அவன் ரஹஸ்யமாகச் சொன்னுலும் சரி; ஒன்றும் சொல்லாமல் யோசனை பண்ணிக்கொண்டிருந்தாலும் சரி; அவளாரோ அறியேனென்றாலும் சரி; அவ்விடத்தில் தாமதித்து நில்லாமல் கடுக வந்து சேர்ந்திடு' என்று சொல்லிப் போகவிட்டேன். போன அந்நெஞ்சு என்னை மறந்து அக்கடல்வண்ணனிடத்தே ஆழ்ந்தொழிந்தது. என்னிடத்துப் பொறுமையுடையரான ஊராருடைய எண்ணமே பலித்ததாயிற்று. என் நெஞ்சே எனக்கு உதவாதிருக்க வேறு யார் எனக்குத் துணைபுரிவார்? என்னைப்பற்றிக் கவலை கொள்வாரே கிடையாது. நெருப்பினருகில் வைத்த மெழுகு போலே இற்றுப்போகாநின்றது என் ஆத்மவஸ்து, ஊரெல்லாம் துஞ்சினுலும் இக்கண்கள் உறங்குகின்றில. அவனை மறந்தாகிலும் பிழைக்கலாமே நான், அப்படி மறக்கவும் மாட்டாதே அவனது நாமங்களையே வாய்வெருவிக்கொண்டிராநின்றேன்.

"நாயகன் தானேவந்து சேருகிறான்; சிறிது ஆறியிருக்கவேண்டாவோ? இப்படியும் பதறலாமோ?" என்கிறீர்களோ? நன்று சொன்னீர்கள்; கடல்போல வளர்ந்த காமத்தை யுடையவர்கள் நன்மை தீமைகளை யுணர்ந்து அடங்கியிருக்கக் கடவர்களோ? வாஸவதத்தை யென்று ப்ரஸித்தையான ஒருத்தி தனது தோழிமார்களையெல்லாம் விட்டொழிந்து விலங்கிட்டிருந்த வத்ஸராயன் பின்னே தெருவேறப் புறப்பட்டுப் போனளே, அவளை இகழ்ந்தார் ஆரேனுமுண்டோ? அவளைப்போன்ற துணிவு உடையளான எனக்கு இத்துணிவுக்கு ப்ரதிகோடியாக ஸ்வரூபசிக்ஷை பண்ணுகிறவர்கள் எனக்குத் தலைவரல்லர்; அவர்களது சொல்லை நான் பேணமாட்டேன்; பின்னை என் செய்வேனென்றால்,

அவனுடைய திருமேனியை ஸேவித்துக் காதல் தீரவேண்டித் திருவேங்கடம் முதலிய திருப்பதிகள்தோறும் நுழைந்து அவனுடைய குணக்கேட்டை விளக்க வல்ல நூதந ஸஹஸ்ரநாமங்களைப் பேசிக்கொண்டு, இகழ்வாருடைய பேச்சுக்களை மதியாமல் தெருவேற மடலூர்ந்து செல்வேனத்தனை—என்று தலைக்கட்டிற்றாயிற்று.

ஸ்ரீ:

திருமங்கை மன்னன் திருவாய்மலர்ந்தருளிய

சிறிய திருமடல்.

[பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய திவ்யார்த்த தீபிகையென்னும் விரிவுரையுடன் கூடியது]

காரார் வரைக்கொங்கை கண்ணார் கடலுடுக்கை
சீரார் சுடர்ச்சுட்டி செங்கலுழிப் பேராற்றுப்
பேராரமார்பிற் பெருமா மழைக்கூந்தல்
நீராரவேலி நிலமங்கை யென்னுமிப்
பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே அம்மூன்றும்
ஆராயில் தானே அறம்பொரு ளின்பமென்று—

பதவுரை.

கார் ஆர் வரை கொங்கை	மேகங்கள் நிறைந்துபடியப்பெற்ற (திருமாலிருஞ்சோலையும் திருவேங்கடமுமாகிற) திருமலைகளை முலையாக உடையளாயும்,
கண் ஆர் கடல் உடுக்கை	இடமுடைத்தான [விசாலமான] கடலைச் சேலையாகவுடையளாயும்,
சீர் ஆர் சுடர் சுட்டி	(ப்ரகாசமாகிற) சிறப்புப் பொருந்திய ஸூர்யனைச் சுட்டியென்னும் ஆபரணமாகவுடையளாயும்,
செம் கலுழி பேர் ஆறு பேர் ஆரம் மார்பின்	சிவந்து கலங்கியுள்ள பெரிய ஆறுகளை சிறந்த ஹாரம்பூண்ட மார்பாக உடையளாயும்,
பெரு மா மழை கூந்தல்	பெருத்துக் கறுத்தமேகங்களைக் கூந்தலாகவுடையளாயும்,
ஆரம் நீர் வேலி	ஆவரண ஜலத்தைக் காப்பாகவுடையளாயுமிருக்கிற,

நிலம் மங்கை என்னும் இ பாரோர்	ஸ்ரீ பூமிப்பிராட்டியென்று சொல்லப் படுகிற இந்நிலவுலகத்திலே உள்ளவர்களால்
சொலப்பட்ட	கூறப்படுகின்ற (புருஷார்த்தங்கள்)
மூன்று அன்றே	மூன்றேயாம்;
அ மூன்றும் ஆராயில்	அம்மூன்று புருஷார்த்தங்கள் எவையென்று ஆராய்ந்தால்,
அறம் பொருள் இன்பம் என்று	தர்மம் அர்த்தம் காமம் என்பனவாம்;

—***—"காரார்வரைக் கொங்கை" என்று தொடங்கி "நீரார வேலி" என்னுமளவும் பூமிப்பிராட்டியை வருணிப்பதாம். பூமிப் பிராட்டியின் வருணனைக்கு இப்போது இங்கே என்ன ப்ரஸக்தி என்னில்; புருஷார்த்தங்களைச் சொல்லக் கருதினராகையாலே அப் புருஷார்த்தங்களைப் பரிக்ரஹித்த சேதநர்களைச் சொல்லவேண்டிற்றாகி, அச் சேதநர்கள் இருக்குமிடத்தைச் சொல்லவேண்டி அவர்கள் இருக்கப்பெற்ற பூமியைச் சொல்லப்புகுந்து அவ்வழியாலே அப்பூமிக்கு அபிமாநிநியான பூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாரென்க.

தான் வைவர்ணியப்பட்டு வருந்திக்கிடக்க, தனது சக்களத்தியாகிய பூமிப்பிராட்டி குறியழியாத அவயவங்களுடனே ஒழுங்காக இருக்கப் பெற்றாளே! என்ற உகவை தோன்ற வருணிப்பதாகச் சொல்லுவாருமுளர். இப்பரகால நாயகியும் பூமிப்பிராட்டியும் எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டவர்களாதலால் சக்களத்தி முறைமையுண்டென்க.

பூமிப்பிராட்டி யென்றால் மங்கையர்க்கு உரிய ஸந்நிவேசங்கள் அவளுக்கு இருக்கவேணுமே யென்ன; அவ்வளவும் செவ்வனே உண்டு என்று மூதலிக்கிறார் ஆறு விசேஷணங்களினால். கறுத்த முலைக் கண்களையுடைய முலைகளின் ஸ்தானத்திலே மேகம்படிந்த மலைகள் உள்ளன வென்கிறார் முதல் விசேஷணத்தாலே. இங்கு வரை என்று பொதுப்படக்கூறி யிருந்தாலும் "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையுமென்னு மிவையே முலையா வடிவமைந்த" என்று இவ்வாழ்வார்தாமே பெரிய திருமடலில் அருளிச் செய்ததுகொண்டு திருமாலிருஞ் சோலைமலையும் திருவேங்கடமலையு

மென்று சிறப்பாகக்கொள்ளலாயிற்று. சிறந்த மேரு முதலிய மலைகளை நிலமங்கைக்குக் கொங்கையாகச் சொல்லலாமாயிருக்க அவற்றைவிட்டுத் தென் வடமலைகளைச் சொன்னது—நாயகன் விரும்பிப் படுகாடு கிடக்குமிடமே முலையாகத் தகுதலால்.

அழகிய சேலையின் ஸ்தானத்திலே கடல் உள்ளதென்கிறார் இரண்டாவது விசேஷணத்தால். "ஸமுத்ராம்பரா" [ஸமுத்ராம்பரா] என்று வடமொழியிலே பூமிக்குப் பெயர் வழங்குமாறறிக. நெற்றிச்சுட்டியின் ஸ்தானத்திலே ஸூர்யனுளனென்கிறார் மூன்றாம் விசேஷணத்தால். மார்பின் ஸ்தாநத்திலே பெரிய ஆறுகளும், அம்மார்பிலணியும் ரத்நமயமான ஆபரணங்களின் ஸ்தாநத்திலே அவ்வாறுகளின் கலங்கிய செந்நீர்ப் பெருக்குகளும் உள்ளனவென்கிறார் நான்காம் விசேஷணத்தால். மயிர்முடியின் ஸ்தாநத்திலே நீர்கொண்டெழுந்த காளமேகங்கள் உள்ளனவென்கிறார் ஐந்தாம் விசேஷணத்தால். இனி, சிறந்த மஹிஷி யென்றால் கட்டுங்காவலுமாயிருப்பளே, அஃது இவளுக்கு முண்டோவென்ன, ஆவரண ஜலமே இவளுக்குக் காப்பென்கிறார் ஆறாம் விசேஷணத்தால்.

நீர் ஆரம் வேலி = ஆரம் என்றது 'ஆவரணம்' என்ற வடசொல்லின் சிதைவு என்பர். அண்டத்துக்குப் புறம்பே பெருகிக் கிடப்பது ஆவரண ஜலம் என்றுணர்க. இப்படிகளாலே நிலமங்கை என்றற்கு உரிய இப்பூமியிலே வாழ்பவர்கள் புருஷார்த்தமென்று சொல்வது, அறம் பொருள் இன்பம் என்கிற தர்ம அர்த்த காமங்கள் மூன்றேயாம்.

ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவார்
சீரா ரிருகலையு மெய்துவர் சிக்கனமற்று
ஆரானு முண்டேன்பா ரென்பது தானதுவும்
ஓராமை யன்றே உலகத்தார் சொல்லுஞ்சொல்
ஓராமை யாமா றதுவுரைக்கேன் கேளாமே
காரார் புரவியேழ் பூண்ட தனியாழித்
தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா வமுதமங் கெய்தி அதில்நின்றும்
வாரா தொழிவதோன் றுண்டே அதுநிற்க
ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே—

பதவுரை

இவற்றினிடை	இம்மூன்று புருஷார்த்தங்களுள்
அதனை எய்துவார் ஆர் ஆர்	அக் காம புருஷார்த்தத்தை அடைகின்றவர்கள் யாவரோ,
சீர் ஆர் இரு கலையும் எய்துவர்	(அவர்கள்) சீர்மை பொருந்திய தருமம் அர்த்தம் என்கிற மற்றையிரண்டு அம்சங்களையும் அடைந்தவராவர்;
ஆரானும்	அறிவில் குறைந்த யாரோ சிலர்
சிக்கன மற்று உண்டு என்பார்	சாச்வதமான (மோக்ஷமென்று) மற்றொரு புருஷார்த்த மிருப்பதாகச் சொல்லுவர்கள்;
என்பதுதான் அதுவும் ஓராமை அன்றே	(அவர்கள் அப்படி) சொல்லுகிறதும் ஆராய்ச்சியில்லாமல் (மூடத்தனமாகச்) சொல்வதேயாம்;
உலகத்தார் சொல்லும் சொல் அது	உலகத்தவர்களாலே சொல்லப்படுகிற அந்த மோக்ஷவாதமானது
ஓராமை ஆம் ஆறு உரைக்கேன்	ஆராய்ச்சியற்றது என்னு மிடத்தை (உங்கட்குத் தெரியச்) சொல்லுகிறேன்;
கேள் ஆமே	(அதனை நீங்கள் காது கொடுத்துக்) கேட்கக்கூடுமே? (கேளுங்கள்;)
கார் ஆர் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி	மேக மண்டலத்தில் செல்லுவதும் ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றதும் ஒற்றைச்சக்கரத்தை யுடையதுமான
தேர் ஆர்	தேரிலே பொருந்தியிருப்பவனும்
நிறை கதிரோன்	நிறைந்த கிரணங்களை யுடையவனுமான ஸூர்யனுடைய
மண்டலத்தை கீண்டு புக்கு	மண்டலத்தைக்கீண்டுகொண்டு அதன் வழியே போய்

அங்கு	ஒரு தேச விசேஷத்திலே [ஸ்ரீ வைகுண்டத்திலே]
ஆரா அமுதம் எய்தி	பரம போக்யமான அம்ருதம்போன்ற பரம புருஷனைப்பெற்று
அதில் நின்றும் வாராதொழிவது ஒன்று உண்டே	அப்பரமபதத்தில் நின்றும் என்றைக்கும் திரும்பி வாராமல் அங்கேயே கிடப்பதென்கிற ஒரு பொருள் பொருத்த முடைத்தோ?
அது நிற்க	அவ்விஷயம் ஒரு புறமிருக்கட்டும்;
ஏர் ஆர் முயல் விட்டு	அழகிய முயலை விட்டு
காக்கை பின் போவதே!	(உபயோகமற்ற) காக்கையின் பின்னே தொடர்ந்து போவாருண்டோ?

—***—இனி, இம்மூன்றுபுருஷார்த்தங்களுள் காமபுருஷார்த்தமே சிறந்ததென்னும் தமது திருவுள்ளத்தை வ்யங்க்யமாக வெளியிடுகிறார்; — [இவற்றினிடை அதனை யெய்துவார் ஆரார், (அவர்) சீராரிருகலையு மெய்துவர்.] அதனை என்று தமக்கு உத்தேச்யமான காம புருஷார்த்தத்தைச் சுட்டினபடி. காம புருஷார்த்தம் எவர்கட்குக் கைவந்ததோ, அவர்கட்கு அறம் பொருள்களும் கைவந்தனவேயாம் என்றபடி. இதன் உட் கருத்து யாதெனில்; காமமே ஸாத்யம், அதாவது பலன்; அதனைப் பெறுதற்கு அறமும் பொருளும் ஸாதநம்—(உபாயம்) என்பது இவர் திருவுள்ளம். எவர்கட்குப் பலன் கைபுகுந்ததோ, அவர்கள் அதற்கு வேண்டிய ஸாதநங்களையும் அநுஷ்டித்தவர்களாக ஆகக்கடவர்களாதலால், காமம் கைவந்தவர்கட்கு அறமும் பொருளும் கைவந்தனவேயாமென்பது அர்த்தாத் ஸித்தமாயிற்றென்க. அறம் பொருள்களை இருகலை என்றது—காமமே ப்ரதாந அங்கியாய், அவை அதன் கலாமாத்திரமாய் இருத்தல் பற்றியாம். கலையாவது ஏகதேசம்.

சிலர், "ஆரார் இவற்றின் இடையதனை எய்துவார்" என்று பிரித்து—தர்மார்த்த காமங்களுள் நடுப்பட்டதாகிய பொருள் கைவந்தவர்களுக்கு, முன்னும் பின்னுமுள்ள மற்றைப் புருஷார்த்

தங்களிரண்டும் கைவந்தனவாம் என்பதாக ஆபாத ப்ரதீதிகொண்டு பொருள் சொல்லக்கூடும். அது ப்ரகரணத்தோடு பொருந்தாது; ஆழ்வார் திருவுள்ளத்துக்கும் சேராது. காமத்தைக் கடைப்பிடித்துச் சிறப்பித்துப் பேசுகிற ப்ரகரணமிறே இது. ஆழ்வார்க்குக் காமத்திலேயிறே இப்போது நோக்கு. காமம் நிஷித்தமன்றோ, அதனை ஆழ்வார் கடைப்பிடிக்கலாமோ? எனின்; விஷயாந்தர காமமென்றும், பகவத் விஷய காமம் என்றும் காமம் இருவகைப்படும்; பகவத் விஷய காமம் வேதாந்தங்களிலும் விதிக்கப்பட்டுள்ளது. அதனையே இங்கு ஆழ்வார் கடைப்பிடித்தாராதலால் குற்றமொன்றுமில்லை யென்க.

இனி, நான்காவதாக மோக்ஷ புருஷார்த்தமென்று ஒன்று உண்டென்பாருடைய ஸித்தாந்தத்தைத் தூஷிக்கிறார். இது வென்? ஆழ்வார் நாஸ்திகரன்றே; ஆஸ்திகராயிருந்துவைத்து மோக்ஷத்தை இல்லைசெய்யலாமோ எனின்; உட் கருத்து அறிகின்றிலீர்கள். "நீள்விசும்பருளும்" என்றும் "இறந்தால் தங்குமூர் $ அண்டமே கண்டுகொண்மின்" என்றும் தமது பலபல திவ்ய ஸூக்திகளாலே பலச்ருதிகளிலே மோக்ஷத்தை அருளிச்செய்கின்ற இவ்வாழ்வார் மோக்ஷதூஷகராக எங்ஙனேயாவர்? பின்னை இதுதன்னில் மோக்ஷத்தை இல்லைசெய்வானேன்? என்னில்; இங்கு * நஹி நிந்தாந்யாயம் அநுஸந்திக்கத்தக்கது. மோக்ஷதூஷணம் இங்கு விளங்க நின்றாலும் அர்ச்சாவதார ப்ராவண்யத்தைச் சிறப்பித்துச் சொல்லுவதில் ஆழ்வார்க்கு முக்கிய நோக்கமென்று கொள்ள வேணுமேயல்லது மோக்ஷதூஷணத்தில் நோக்காகக் கொள்ளக் கூடாது. நஹிநிந்தா ந்யாயத்தின் கருத்து இதுவேயாம்.

மோக்ஷமுண்டென்பது அவிவேகிகள் சொல்லும் சொல் என்றதை நிரூபிக்கிறார்— காரார் புரவியேழ் என்று தொடங்கி. மேக மண்டலத்திலே ஸஞ்சரிக்கின்ற ஏழு குதிரைகள் பூட்டின ஒற்றைச் சக்கரமுடைய தேரிலே கதிராயிரமுடையனாய் விளங்குகின்ற ஸூர்யனுடைய மண்டலத்தைப் பிளந்துகொண்டு அவ்வழியே போய் ஒரு பரமபதமென்னும் தேசத்தை அடைவதாகவும் அங்கே ஆராவமுதத்தை அநுபவிப்பதாகவும் அவ்விடத்தைவிட்டு ஒருநாளும்

$ அண்டம்—பரமபதம்.

திரும்பி வருவதில்லையாகவும் இப்படிப்பட்ட கட்டுக்கதைகளைக் கூறுகின்றார்களே; விவேகிகள் இப்படி அஸம்பத்தப்ரலாபம் பண்ணுவர்களா வென்று நீங்கள் ஆராயமாட்டீர்களோ வென்கிறார். மேகமண்டலத்தில் குதிரைகள் ஓடுவதென்பது அஸம்பாவிதம்; ஒற்றைச் சக்கரமுடைய தேர் உள்ளதும் அஸம்பாவிதம்; அந்தத் தேரை ஏழு குதிரைகள் இழுக்கவேண்டியதும் அப்ரஸக்தம்; நெடுந் தூரத்தினின்றும் கண்ணைச் செம்பளித்துப் பார்க்கவும் முடியாத ஸூர்யனைப் பிளந்துகொண்டு போவதென்பது ஸர்வாத்மநா அஸம்பாவிதம். இந்நிலத்திலே அர்ச்சாவதாரத்திலே ஆராவமுதம் ப்ராப்தமாயிருக்க, பரோக்ஷமான வொரு தேசத்திலே ஆராவமுதமிருப்பதாகச் சொல்லுவதும் அதனை யநுபவிப்பவர் என்றுமென்றும் மீளாதே அங்கேயே நித்யராயிருப்பரென்பதும் பொய்களினும் விஞ்சிய பொய் என்று அங்வாருஹ்யவாதம் பண்ணினாராயிற்று. [அங்வாருஹ்யவாதமாவது—உண்மையில் தனக்கு அபிமதமல்லாத பொருளை ஒரு கார்யார்த்தமாக என்றுகொண்டு சொல்லுகை; ஜைமிநி மஹர்ஷி பூர்வமீமாம்ஸையில் நிரீச்வரவாதம் பண்ணியிருப்பதை இதற்கு த்ருஷ்டாந்தமாகக் கூறலாம்.]

ஓராமை=ஓர்தல்—ஆராய்ச்சி; ஓராமை—ஆராய்ச்சியில்லாமை, விவேகமின்மை. கேளாமே=கேள் ஆமே என்று பிரிக்க: கேள்—முதனிலைத் தொழிற்பெயர்; கேட்கல் ஆமோ என்றபடி: கேளுங்களென்கை. புரவி—குதிரை.

அது நிற்க=மோக்ஷமென்பதொன்று இருக்கவாவது இருக்கட்டும்; இல்லாமலாவது போகட்டும்; அதைப்பற்றி விவாதப்படுகை அநாவச்யகம் என்றபடி.

மோக்ஷமுண்டென்றே கொண்டாலும் அர்ச்சாவதாரத்திற்காட்டிலும் அது மிகவும் அஸாரம் என்கிறார் ஏரார் முயல்விட்டு என்பதனால். நிலத்திலே ஓடுவதுமுயல்; மரங்களின்மேலே பறந்து திரிவது காக்கை; மாம்ஸம் வேண்டியவன் கைப்பட்ட முயலைவிட்டுக் கைப்பட அரிதாயும் கைப்பட்டாலும் உபயோகப்படாததுமான காக்கையைப் பின்பற்றித்திரிதல் எப்படி அவிவேகிக்ருத்யமோ, அப்படியே எளிதாயும் ரஸவத்தரமாயுமுள்ள அர்ச்சாவதார போகத்தைவிட்டு அரிதாயும் அஸாரமாயுமுள்ள மோக்ஷபோகத்தைப்பெற விரும்புகையும் பேதைமையின் பணி என்றாராயிற்று.

ஆக இதுவரையில் ஆழ்வார் தாமான தன்மையிலே நின்று பேசினதென்றும் மேலுள்ளதெல்லாம் தலைமகள்நிலைமை யெய்திப் பேசுவதென்றும் நிர்வஹிப்பதுண்டு. அன்றி, ஆதி முதலாகவே முற்றும் நாயகி ஸமாதியாலே பேசுகிற பாசுரமென்றும் யோஜிப்பதுண்டு; இதுவே பெரிய வாச்சான் பிள்ளை திருவுள்ள மென்னத் தகும். இரண்டு படியும் ஏற்றதேயாம். ... ... *

ஏரா ரிளமுலையீர் என்றனக் குற்றதுதான்
காரார் குழலெடுத்துக் கட்டிக் கதிர்முலையை
வாரார வீக்கி மணிமே கலைதிருத்தி
ஆரா ரயில்வேற்க ணஞ்சனத்தின் நீறணிந்து
சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன்நான்
நீரார் கமலம்போற் செங்கண்மா லென்றொருவன்
பாரோர்க ளெல்லாம் மகிழப் பறைகறங்கச்
சீரார் குடமிரண் டேந்திச் செழுந்தெருவே
ஆரா ரெனச்சொல்லி யாடு மதுகண்டு
ஏரா ரிளமுலையா ரன்னையரு மெல்லாரும்
வாராயோ வென்றார்க்குச் சென்றேனென் வல்வினையால்
காரார் மணிநிறமுங் கைவளையுங் காணேன்நான்
ஆரானுஞ் சொல்லிற்றுங் கொள்ளேன்......—

பதவுரை

ஏர் ஆர் இள முலையீர்	அழகிய இளமுலைகளையுடைய மாதர்காள்!
என் தனக்கு உற்றது தான்	எனக்கு நேர்ந்த ஸம்பவம் (யாதெனில் சொல்லுகிறேன் கேளுங்கள்—;)
கார் ஆர் குழல் எடுத்து கட்டி	கரிய நிறமுடைய கூந்தலை (அலையவொண்ணாதபடி) மேலே தூக்கி முடித்து
கதிர் முலையை வார் ஆர வீக்கி	ஒளிமிக்க முலைகளைக் கச்சு நிறையும்படிநெருக்கிக் கட்டி
மணி மேகலை திருத்தி	ரத்னங்களிழைத்த அரைநூல் மாலையை ஒழுங்குபட அணிந்து

ஆர் ஆர் அயில் வேல் கண்	அழகு பொருந்திய கூரிய வேல் போன்ற கண்களை
அஞ்சனத்தின் நீறு அணிந்து	மைச்சுண்ணத்தாலே அலங்கரித்து
சீர் ஆர் செழு பந்து கொண்டு	மிகவும் அழகிய ஒரு பந்தைக் கையிற் கொண்டு
நான் அடியா நின்றேன்	நான் அடித்துக் கொண்டிருந்தேன்; (அப்படியிருக்கையில்)
நீர் ஆர் கமலம் போல் செம் கண்	தண்ணீரை விட்டுப்பிரியாத தாமரைப் பூப்போன்ற சிவந்த திருக்கண்களையுடையனான
மால் என்ற ஒருவன்	திருமால் என்று சொல்லப்படுகிற ஒரு புருஷன்
பாரோர்கள் எல்லாம் மகிழ	உலகத்தாரனைவரும் மகிழும்படி
பறை கறங்க	பறையென்ற வாத்யம் முழங்க
சீர் ஆர் குடம் இரண்டு ஏந்தி	சிறந்த இரண்டு குடங்களைக் கையிலேந்திக்கொண்டு
செழும் தெருவே	"இப்பெரிய வீதியிலே
ஆர் ஆர் என சொல்லி	(எனது குடக்கூத்துக்குத் தப்பிப் பிழைக்கும்மாதர்) ஆரேனுமுண்டோ? ஆரேனுமுண்டோ?" என்று சொல்லிக்கொண்டு
ஆடும் அது கண்டு	குடக்கூத்தாடின படியைக் கண்டு
ஏர் ஆர் இள முலையார்	அழகிய இள முலைகளையுடைய மாதர்களும்
அன்னையரும் எல்லாரும்	தாய்மார்களும் (ஆகிய) பெண்டிர்களெல்லாரும்
வாராயோ என்றார்க்கு	"அடீ! நீயுங்காண வரமாட்டாயோ?" என்றழைக்க, அவர்கட்கு (உடன்பட்டு)

என் வல் வினையால்	எனது கொடிய பாவத்தினால்
சென்றேன்	(அவர்களுடன்கூடி அவ்விடத்தேறப்) போனேன்; (போனதும்)
கார் ஆர் மணி நிறமும்	(முன்பு அவனோடு கலந்ததனால் பெற்றிருந்த) நீலமணி நிறத்தையும்
கை வளையும்	கையில் தங்கியிருந்த வளைகளையும்
நான் காணேன்	நான் இழந்தவளானேன்;
ஆரானும் சொல்லிற்றும்	(உற்றுருறவினர்களில்) ஆராவது எதையாவது ஹிதமாகச் சொன்னால் அதையும்
கொள்ளேன்	உதறித் தள்ளுபவ ளாயினேன்;

—***—இனி ஆழ்வார் பரகால நாயகி என்ற திருநாமத்தால் நிர்த்தேசிக்கப்படுவர். தன்னை வினவவந்த சில மங்கைமார்களை நோக்கித் தனது அவஸ்தையைக்கூறத்தொடங்குகின்றாள் பரகாலநாயகி. இது தானும் பரகாலநாயகியான தன்மையாலே சொல்லுவதல்ல; க்ருஷ்ணாவதாரத்தில் குடக்கூத்திலே ஈடுபட்டு மெலிந்த ஒரு ஆய்ச்சியின் தன்மையை அடைந்து சொல்லுவதாம். "காரார்குழலெடுத்துக்கட்டி" என்று தொடங்கி "அஞ்சனத்தின் நீறணிந்து" என்னுமளவும் பந்தடிப்பதற்குத் தான் செய்துகொண்ட அலங்காரங்களைக் கூறுகிறபடி. எனது அலங்காரத்தின் அமைதியைக் கண்டு ஈடுபட்டு என்னைப் புணரவேண்டி அவன்றான் மடலெடுக்க வேண்டியிருக்க, நானன்றோ மடலெடுக்க நேர்ந்தது! என்பது ஸூசனை. வார்—ரவிக்கை. மேகலை—மேகலா என்ற வடசொல் திரிபு; அரையிலணியும் ஆபரணம். அயில்—கூர்மை. அஞ்சனம்—வடசொல்.

இங்கே பந்து விளையாட்டு ஆடிக்கொண்டிருந்ததாகச் சொல்லுகிறவிதற்கு உள்ளுறை பொருள் யாதெனில்; நான் பகவத் விஷயமே அறியாமல் ப்ராக்ருத பதார்த்தங்களிலே மண்டிப் போது போக்கிக்கொண்டு சுகமாகக் கிடந்தேன்; அங்ஙனே கிடந்த என்னை அநியாயமாக பகவத் விஷயத்திலே கொண்டு மூட்டித் துன்பப்படுத்தினார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறபடி. பந்தானது செந்நூல் வெண்ணூல் கருநூல்களாலே கட்டப்பட்டிருப்பது போல்

ப்ரக்ருதியும் "𑌅𑌜𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍" [அஜாமேகாம் லோஹித சுக்ல க்ருஷ்ணும்] என்று ஸத்வரஜஸ்தமோ குணங்களோடே விசித்திரமான கர்ம ஸூத்ரத்தாலே கட்டப்பட்டிருக்கும். பந்து கீழே விழுவதும் மேலே எழுவதுமாயிருக்கிறுப்போலே ப்ரக்ருதியும்—அஜ்ஞனும் அசக்தனுமான சேதநன் தான் செய்த கருமங்களுக்கேற்ப மேலுலகங்களில் போவதும் திரும்புவதுமாம்படி ஈச்வரன் தன் விளையாட்டுக்காகத் தன் ஸங்கல்பத்தாலே ப்ரேரிக்கத் தாழவிழுந்தும் உயரவெழுந்தும் சக்ரப்ரமம் போலே சுழன்றும் போருகிற ஆத்மாவோடுண்டான ஸம்பந்தத்தினாலே தானும் விழுந்தெழுகை முதலான ஸ்வபாவங்களோடு கூடியதாயிருக்கும். ஆகவே ஸ்வாபதேசத்தில் பந்து என்று ப்ரக்ருதியைச் சொல்லக் குறையில்லை.

இப்படி அந்யபரையாய்க் கிடந்த என்னைச் சில பெண்டுகள் அழைத்துக் கொண்டுபோய்ப் படாதபாடு படுத்தினார்களென்கிறாள் மேல். தன்னிலத்தில் செழுமை மாறாது விளங்குகின்ற தாமரை போன்ற திருக்கண்களாலே எல்லாரையும் மதிமயக்கவல்லனாய், மால் என்றே திருநாமமுடையனான ஒரு விலக்ஷண மஹா புருஷன் எல்லாரும் மனமகிழும்படியாகப் பறைகொட்டிக் குடக்கூத்தாடிக்கொண்டு "பெண்களே! எனது கோலத்தைக் கண்டீர்களா? இனி உங்களுடைய நாண்மடமச்சம் முதலிய குணங்களைக் காத்துக் கொள்ள முடியுமானால் நன்கு காத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுவான் போன்று வீதியார வருகின்றமையைக்கண்ட என் தாய்மார்களும் மற்றுமுள்ள பெண்களும் கடுக என்பால் ஓடி வந்து 'அடீ! ஈதென்ன விளையாட்டு!; எழுந்து ஓடிவா' என்றழைக்க, எனக்குப் போராத காலம் வலிதாயிருந்தபடியால் அவர்களது வார்த்தையை அலக்ஷியம் செய்திருக்க மாட்டாமல் பதறியெழுந்து ஓடிச் சென்றேன்; அங்குச் சென்று சேர்ந்த க்ஷணத்தில் தானே நான் நிறமிழந்தேன்; கையில் வளைகள் கழன்று விழுந்து போம்படி உடல் ஒரு துரும்பாக இளைக்கப் பெற்றேன்; "இப்படிப்பட்ட காம நோய் உனக்கு உரியதன்று" என்று நன்மை சொல்ல வந்தவர்களுடைய பேச்சையும் ஒரு பொருளாக மதியாமல் உதறித் தள்ளி விடும்படியான நிலைமையில் நின்றேன்.

[என் வல்வினையால்] இங்கு வல்வினையென்று பக்தியைச் சொல்லுகிறதென்பர்.

... ... அறிவழிந்து
தீரா வுடம்பொடு பேதுறுவேன் கண்டிரங்கி
ஏரார் கிளிக்கிளவி யெம்மனை தான் வந்தென்னைச்
சீரார் செழும்புழுதிக் காப்பிட்டுச் செங்குறிஞ்சித்
தாரார் நறுமாலைச் சாத்தற்குத் தான்பின்னும்
நேரா தனவொன்று நேர்ந்தா ளதனாலும்
தீராதென் சிந்தைநோய் தீராதென் பேதுறவு
வாராது மாமை அதுகண்டு மற்றாங்கே
ஆரானும் மூதறியு மம்மனைமார் சொல்லுவார்
பாரோர் சொலப்படுங் கட்டுப் படுத்திரேல்
ஆரானும் மெய்ப்படுவ னென்றார்......—

பதவுரை

அறிவு அழிந்து	மதி கெட்டு
தீரா உடம்பொடு	ஒழிய மாட்டாத உடம்போடு கூடி
பேது உறுவேன்	பைத்தியம் பிடித்தவள் போன்றிருந்த என்னை
ஏர் ஆர் கிளி கிளவி எம் அனை கண்டு இரங்கி	அழகிய கிளியின் பேச்சுப் போன்ற பேச்சையுடையளான என் தாயானவள் கண்டு இரக்கங்கொண்டு
தான் வந்து	தானே (என்னருகில்) வந்து
என்னை	எனக்கு
சீர் ஆர் செழு புழுதி காப்பு இட்டு	அழகிய சிறந்த பாகவத ஸ்ரீபாததூளியைக் கொண்டு ரக்ஷையிட்டு
செம் குறிஞ்சி தார் ஆர் நறு மாலை சாத்தற்கு	செங்குறிஞ்சிமலர்கள் நிறைந்த மணம் மிக்க மாலையை அணிந்துள்ள 'சாஸ்தா' என்கிற தேவதாந்தரத்திற்கு
தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்	தான் இதுவரை ஒருநாளும் செய்தறியாத ஒரு அஞ்சலியைச் செய்தாள்;
அதனாலும் என் சிந்தை நோய் தீராது	அப்படி செய்ததனாலும் எனது மனோவியாதியானது தீர்ந்ததில்லை;

என் பேதுறவு தீராது	எனது அறிவு கேடும் தீரவில்லை;
மாமை வாராது	(இழந்த) மேனி நிறமும் மீண்டு வரவில்லை;
மற்று	அதற்குமேல்
ஆங்கே ஆரானும் மூது அறியும் அம்மனைமார்	அங்கிருந்த யாரோ சில பழம்பாட்டுகளறிந்த பாட்டிமார்கள்
அது கண்டு	அப்படிப்பட்ட எனது நிலைமையைக் கண்டு
சொல்லுவார்	(நோய் தீர உபாயம்) சொல்லத் தொடங்கினர் ; (என்ன சொன்னார்களென்னில்;)
பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திர் எல் ஆரானும் மெய்ப்படுவன் என்றார்	"குறி கேட்பதென்று உலகத்தார் ஒன்று சொல்வதுண்டு; அதைச் செய்தீர்களாகில் (இந் நோயை உண்டு பண்ணினவன்) யாராயிருந்தாலும் உண்மையாக வெளிப்பட்டுவிடுகிறான்" என்று சொன்னார்கள்;

—***—சைதந்யம் என்பது அடியோடே போயிற்று; பைத்தியம் பிடித்தவள் போன்று வாயில் வந்ததைப் பிதற்றிக்கொண்டு கிடந்தேன்; இப்படி கிடந்த என்னை எனது நற்றாய் கண்டு 'ஐயோ! நம் மகளுக்கு இப்படிப்பட்ட நோய் நேர்ந்து விட்டதே! இஃது எங்ஙனே தீரப்போகிறது!' என வருந்தி, இதற்கு ஏதேனும் நல்ல பரிஹாரம் செய்வோமென்று சிந்தித்து "மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே" "தவளப் பொடிக் கொண்டு நீர் இட்டிடுமின் தணியுமே" என்ற திருவாய்மொழியில் வாஸனையாலே பாகவதர்களின் ஸ்ரீபாத ரேணுவைக் கொணர்ந்து ரக்ஷையிட்டாள். ஸ்ரீவைஷ்ணவ ஸந்தானத்திற்குத் தகுந்த இதனைச் செய்தும் பர்யாப்தி பெறமாட்டாத ப்ரேமாதிசயத்தாலே கலக்கமுற்று ஒரு தேவதாந்தரத்தின் காலிலும் கும்பிட்டாள். இப்பிறவியில் இன்றளவும் செய்தறியாத தொன்றாகிய இவ்வரிய செயலைச் செய்தவிடத்தும் என் நோய் தீரவில்லை; என் பைத்தியம் நீங்கவில்லை; போன மேனி நிறமும் மீண்ட

இல்லை; இப்படிப்பட்ட அவஸ்தையைக்கண்ட அங்குள்ள – பழங் கதைகளறியும் பாட்டிமார் சிலர் வந்து, ‘அந்தோ! நீங்கள் நோயின் நிதானமறியாது மனம்போனபடி செய்யப்பார்ப்பது தகுதியன்று; ‘கட்டுவிச்சி’ என்று சொல்லப்படுகிற குறி சொல்லுங் குறத்தியர் சிலருண்டு; அவர்களைவரவழைத்துக் குறி கேளுங்கள்; இந்நோயை விளைவித்தவன் இன்னானென்று தெற்றென விளங்கும்; இங்ஙனே செய்யாமல் நீங்கள் தாந்தோன்றியாகச் செய்யும் பரிஹாரங்கள் ஏதுக்கு?’ என்று சொன்னார்கள்.

[தீராவுடம்பொடு.] ஆபத்து மிகுந்தால் உடம்பு ஒழியலாமே; ஒழியாமல் ஆத்ம வஸ்துவைப்போலே அழியாததாயிருந்து கொண்டு துன்பப்படுத்துகின்றதி! என்ற வருத்தம் விளங்கும். **பேதுறுவேன்**=இரண்டாம் வேற்றுமைத்தொகை: பேதுறுவேனை என்றபடி.

செங்குறிஞ்சித்தாரார் என்ற வாக்கியத்தில், “**நறுமாலைச்சாத்தற்கு**” என்று பாடமோதவேண்டியதை விட்டு “நறுமாலைசாத்தற்கு” என்று தப்பான பாடம் ஓதிவந்தனராகையால் இவ்வாக்கியத்தின் பொருளை உள்ளபடி அறியாதொழிந்தனர் பலர்; శాస్తా— ‘சாஸ்தா’ என்கிற வடசொல் **சாத்தன்** எனத்திரிந்து கிடக்கிற தென்பதையறியாமல் “செங்குறிஞ்சித்தாரார் நறுமாலை சாத்திக் கொள்ளுகிறவனுக்கு” என்று கற்றறிந்த பல பெரியோர்களும் பொருள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அங்ஙனன்று; செங்குறிஞ்சித்தாரார் நறுமாலையையுடைய, [**சாத்தற்கு**] சாஸ்தா என்று ப்ரஸித்தமான தேவதாந்தரத்திற்கு என்று உண்மைப் பொருள் உணர்க. சாத்தன் + கு = சாத்தற்கு. இவ்வகைப் பொருளில் “மாலைச்சாத்தற்கு” என்றே பாடமோதவேண்டும். அமரகோசத்தில் “సర్వజ్ఞస్సుగతో బుద్ధః” [ஸர்வஜ்ஞஸ் ஸுகதோ புத்த:] என்று தொடங்கி, “మునీంద్రః శ్రీఘనశ్శాస్తా” [முநீந்த்ர: ஶ்ரீகநச் **சாஸ்தா**] என்று புத்த தேவதைக்குப் பெயர்கள் படிக்கப்பட்டுள்ளமை காண்க.

[**தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்.**] “மறந்தும் புறந்தொழா மாந்தர்” என்னுங் குடிப்பிறப்பின் உறைப்பு உள்ளமையால் தேவதாந்தரத்தைத் தொழுதாளென்று சொல்வதற்கும் இத்தலைமகள் அருவருத்து இங்ஙனே மறைத்துச் சொல்லுகிறாள்.

இதுவரையில் செய்யாத ஒரு காரியத்தைச் செய்தாளென்கிறாள். "வகுத்த விஷயத்திலே ஓர் அஞ்ஜலி பண்ணினால் அது ஸாதநத்தில் அந்வயிக்கில் செய்வதென்? என்றிருக்கக்கடவ தான், திருத்துழாய் பரிமாறுதவொரு தேவதைக்கு ஓர் அஞ்ஜலியுமகப்படப் பண்ணினாள் போலே காணும்" என்ற பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்திக்கத்தகும்.

[மூதறியு மம்மனைமார் சொல்லுவீர்.] இவ்விடத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிச்செயல் :—" 'இந்திரன்படிகளிருக்கும்படியென்?' என்று ஒருத்தி ஒருத்தியைக் கேட்க; 'தொண்ணூற்றெட்டு இந்த்ராதிகளை ஸேவித்தேன், இந்த்ரன்படி கேட்கிறாய், வேணுமாகில் சொல்லுகிறேன்' என்றாளிறே: அப்படியே பழையராய், நோய்களுமறிந்து நோய்க்கு நிதாநமுமறிந்து பரிஹாரமும் பண்ணுவித்துப் போரும் மூதறிவாட்டிகள் சொல்லுகிறார்கள்"—என்று.

[கட்டுப்படுத்திரேல்.] கட்டுப்படுத்துதலாவது — குறி கேட்பது. ... ...

... ... அதுகேட்டுக்
காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாப்
பேரா யிரமுடையா னென்றாள் பேர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள் கையதுவும்
சீரார் வலம்புரியே யென்றாள் திருத்துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா
நீரேது மஞ்சேன்மின் நும்மகளை நோய்செய்தான்
ஆரானு மல்ல னறிந்தே னவனைநான்
கூரார் வேற்கண்ணீ ருமக்கறியக் கூறுகேனோ—

பதவுரை

அது கேட்டு	அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த அந்த வார்த்தையையே கேட்டு
கார் ஆர் குழல் கொண்டை	கறுத்த மயிர் முடியை யுடையளான

கட்டுவிச்சி	குறிசொல்லுங் குறத்தியானவள் (ஒருவரும் அழையாதிருக்கத் தானாகவே வந்து)
கட்டேறி	தெய்வ ஆவேசங்கொண்டு
சீர் ஆர் சுளகில் சில நெல் பிடித்து எறியா	அழகியதொருசிறுமுறத்தில் நின்றும் சில நெற்களைப் பிடித்தெடுத்து முன்னேவீசியெறிந்து (குறிபார்த்து)
வேரா	வேர்வைவிட்டு
விதிர்விதிரா	சுழன்று
மெய் சிலிரா	மயிர்க்கூச்செறிந்து
கை மோவா	கையை மோந்து பார்த்து
பேர் ஆயிரம் உடையான் என்றாள்	ஆயிரந் திருநாமங்களை யுடையனான எம்பெருமானே (இந்நோய் செய்தவன்) என்று எண்ணினாள்;
பேர்த்தேயும்	அதற்குமேல்
கார் ஆர் திரு மேனி காட்டினாள்	(அவனது) காளமேகம் போன்ற திருமேனியைப் படியெடுத்துக் காட்டினாள்;
கையதுவும்	(அவனது) திருக்கையிலே யுள்ளதும்
சீர் ஆர் வலம்புரியே என்றாள்	அழகிய வலம்புரிச் சங்கமே யென்று அபிநயித்துக் காட்டினாள்;
திரு துழாய் தார் ஆர் நறு மாலை கட்டுரைத்தாள்	திருத்துழாய் மலர்கள்நிறைந்த மணம் மிக்க மாலையையும் அபிநயித்துக் காட்டினாள்;
கட்டுரையா	ஆக இவ்வளவும் அங்க சேஷ்டைகளாலே காட்டின பின்பு (வாய்விட்டுச் சொன்னதாவது)
நீர் ஏதும் அஞ்சேல்மின்	"நீங்கள் சிறிதும்பயப்படவேண்டா;
நும் மகளை நோய் செய்தான்	உங்கள் பெண்ணை (இப்படி) நோவு படுத்தினவன்

ஆரானும் அல்லன்	யாரோ ஒரு க்ஷுத்ர புருஷனல்லன்; (தேவதாந்தரங்களினால் வந்த நோய் அல்ல இது;)
அவனை நான் அறிந்தேன்	நோவுபடுத்தின புருஷனை (இன்னானென்று) நான் தெரிந்துகொண்டேன்;
கூர் ஆர் வேல் கண்ணீர்	கூரியவேல்போன்ற கண்களையுடைய மங்கைமீர்களே!
உமக்கு அறிய கூறுகேனோ	உங்களுக்கு (அவனைத்) தெரியச் சொல்லட்டுமா?

—***—கீழே சில கிழவிமார்கள் "குறி கேட்டால் நோய்க்கு நிதாநம் தெரியும்" என்றார்களே; அவ்வளவில், குறி சொல்லுங் குறத்தி யொருத்தி தன்னை யழையாதிருக்கச் செய்தே,

"கொங்குங் குடந்தையுங் கோட்டி யூரும் பேரும்
எங்குந் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங் கழைத்ததூஉ!!!

கண்டியூ ரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டியே திரிவேனை யாரிங் கழைத்ததூஉ!!!

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடமும்
மண்ணகரம் மாமாட வேளுக்கை தென்குடந்தை
எங்குந் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங் கழைத்ததூஉ!!!

நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில் நாவாயும்
எங்குந் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங் கழைத்ததூஉ!!!

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவு மஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் பூதூரும்
எங்குந் திரிந்து இன்றே மீள்வேனை யாரிங் கழைத்ததூஉ!!!

என்று தெருவேறக் கூவிக்கொண்டு தானாகவே வந்து சேர்ந்து செய்த காரியங்களையும் சொன்ன வார்த்தைகளையும் சொல்லுகிறது மேல். கட்டுவிச்சி வந்தவுடனே தைவாவேசங்கொண்டு ஒருமுறத்தில் நின்றும் சில நெல்லுகளை ஒரு முஷ்டியெடுத்து எறிந்தாள்;

எதுக்காக வென்னில்; குறி பார்க்கும் வகைகளில் இஃது ஒன்று. கண்களை மூடிக்கொண்டு ஒரு பிடி நெல் எடுத்து அவற்றை எண்ணிப்பார்த்து, ஒற்றைப்பட்ட எண் வருகிறதா, இரட்டைப்பட்ட எண் வருகிறதா என்று பரீக்ஷித்துப் பார்த்து அதனால் தேவதாந்தர ஸம்பந்தமான நோயோ அல்லது பகவத் விஷயமான நோயோ இரண்டத்தொன்றை நிச்சயிப்பது—என்ற ஒரு ஸங்கேத முளதாகக் கொள்க.

உலகத்தில் முறமானது மணியையும் பதரையும் பிரித்து பதரை நீக்கி மணியைத் தாங்கிக்கொள்ளுங் கருவியாயிருப்பது போல் இங்கும் பதராகிய தேவதாந்தரங்களை நீக்கி "மணியே மணிமாணிக்கமே மதுசூதா" என்னப்பட்ட நன்மணியாகிய எம்பெருமானை ப்ரகாசிப்பித்த சுளகு ஆகையாலே "சீரார் சுளகு" என்று சிறப்பித்துக் கூறப்பட்டது.

நெல்லுகளை எண்ணிப் பார்த்து இவளுக்கு பகவத் விஷயமான நோய்தானென்று குறத்தி தானறிந்தவாறே "கடல் வண்ணரிது செய்தார்" என்று சொல்ல நினைத்தாள்; எம்பெருமானை வாய்விட்டுச் சொல்லுவதென்றால் எளிதானகாரியமோ? "மொய்த்துக் கண்பனி சோரமெய்கள் சிலிர்ப்ப ஏங்கி இளைத்து நின்று" என்றபடி சில விகாரங்கள் விளையுமே; அவை விளைந்தன. (அதாவது) வேர்வையடைந்தாள்; உடல் நடுங்கினாள்; மயிர்க்கூச்செறிந்தாள்;

இப்படி வாய்விட்டுச் சொல்ல முடியாமல் நிலைதடுமாறி எம்பெருமானுடைய அநுஸந்தாநம் முற்றவே தந்மயமாயிருக்குந் தன்மையை அடைந்தாள்; "விரை குழுவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழுமே" என்றாற்போலத்திருத்துழாய் மணம் மணக்கத்தொடங்கிற்று; கையை மோந்து பார்த்தாள்; திருத்துழாய்ப் பரிமளம் நன்றாகத் தோன்றிற்று; ஸஹஸ்ரநாமங்களை யுடையனான எம்பெருமானே (இவளது நோய்க்கு நிதாநம்) என்று நிச்சயித்தாள். எந்தத் திருமேனியைக் கண்டு நான் இந்நோய் பெற்றேனோ அந்தத் திருமேனியை அபிநயித்துக் காட்டினாள். வலங்கையாழி இடங்கைச் சங்கமுடைய பெருமானென்று அபிநயித்தாள். ("கையதுவும் சீரார் வலம்புரி" என்று சங்கை மாத்திரம் சொல்லியிருந்தாலும் இது சக்கரத்துக்கும் உபலக்ஷணமாமென்க.) "தோளிணை

மேலும் நன் மார்பின்மேலும் சுடர்முடிமேலும், தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடை யம்மான்" என்பதாக அபிநயித்தாள். அதற்குமேல், வாய்விட்டுச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கி, "அம்மனைமீர்! நீங்கள் இந்நோய்க்குச் சிறிதும் அஞ்சவேண்டா; நும்மகளன்றோ இவள்; உங்கள் வயிற்றிற் பிறந்த இவளை க்ஷுத்ர தேவதைகள் தீண்டுமோ? எந்த நாயும் தீண்டிற்றில்லை; தீண்டின மஹாபுருஷனை நானறிந்தேன்; இப்போது நான் அபிநயித்துக்காட்டின வகைகளாலே நீங்கள் தெரிந்துகொண்டிருக்கக் கூடுமாயினும் ஸுஸ்பஷ்டமாக நீங்கள் தெரிந்துகொள்ளுமாறு அன்னவனை குண சேஷ்டிதாதிகளுடன் விளங்கச் சொல்லுகிறேன், கேளுங்கள் — என்று நோய் செய்த எம்பெருமானைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கத் தொடங்கினாள்.

எறியா, வேரா, விதிர்விதிரா, சிலிரா, மோவா என்பன— செய்யா வென்னும் வாய்பாட்டிறந்த காலவினை யெச்சங்கள்; எறிந்து, வேர்த்து, விதிர்விதிர்த்து, சிலிர்த்து, மோந்து என்றபடி.

"என்றாள்" என்றும் "கட்டுரைத்தாள்" என்றும் உள்ளவை—கட்டுவிச்சி தன் நெஞ்சினுள்ளேயே சொல்லிக்கொண்டதைச் சொல்வன. "கீழ்ச் சொன்னதடைய ஸ்வகதமாகச் சொன்னாள்" என்றார் பெரியவாச்சான் பிள்ளையும். கட்டுரையா = இதுவும் இறந்தகால வினையெச்சம்; உரைத்து என்றபடி.

ஆரா லிவ்வைய மடியளப் புண்டதுதான்
ஆரா லிலங்கை பொடிபொடியா வீழ்ந்ததுமற்று
ஆராலே கன்மாரி காத்ததுதா னாழிநீர்
ஆரால் கடைந்திடப் பட்ட தவன்காண்மின்
ஊரா நிரைமேய்த் துலகெல்லா முண்டுமிழ்ந்தும்
ஆராத தன்மையனா யாங்கொருநா ளாய்ப்பாடிச்
சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய்
வாரார் வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு
ஏரா ரிடைநோவ எத்தனையோர் போதுமாய்ச்
சீரார் தயிர்கடைந்து வெண்ணெய் திரண்டதனை
வேரார் நுதல்மடவாள் வேறோர் கலத்திட்டு
நாரா ருறியேற்றி நன்கமைய வைத்ததனைப்

போரார் வேற்கண்மடவாள் பேர்ந்தனையும் பொய்யுறக்கம்
ஓரா தவன்போல் உறங்கி யறிவுற்றுத்
தாரார் தடந்தோள்க ளுள்ளளவுங் கைநீட்டி
ஆராத வெண்ணெய் விழுங்கி அருகிருந்த
மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே
ஓரா தவன்போல் கிடந்தானைக் கண்டவளும்
வாராத்தான் வைத்தது காணாள் வயிறடித்திங்கு
ஆரார் புகுதுவா ரைய ரிவரல்லால்
நீரா மிதுசெய்தீ ரென்றோர் நெடுங்கயிற்றால்
ஊரார்க ளெல்லாருங்காண வுரலோடே
தீரா வெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்தடிப்ப
ஆரா வயிற்றினோ டாற்றாதான்......—

பதவுரை

இ வையம் ஆரால் அடி அளப்புண்டது	யாவனொருவனாலே இப்பூமியானது அளக்கப்பட்டதோ,
இலங்கை ஆரால் பொடி பொடி ஆ வீழ்ந்தது	இலங்காபுரியானது யாராலே பொடி யாக்கப்பட்டு நசித்தொழிந்ததோ,
ஆராலே கல் மாரி காத்தது	யாவனொருவனாலே கல்மழையானது தடுக்கப்பட்டதோ,
ஆழி நீர் ஆரால் கடைந்திடப்பட்டது.	கடலானது யாவனொருவனாலே கடையப்பட்டதோ,
அவன்	அக் காரியங்களெல்லாஞ் செய்த ஒரு விலக்ஷண புருஷன்
ஊர் ஆ நிரை மேய்த்து	ஊரிலுள்ள பசுக்கூட்டங்களை யெல்லாம் மேய்த்தும்
உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தும்	உலகங்களை யெல்லாம் (பிரளய காலத்திலே) அமுது செய்தும் (ஸ்ருஷ்டி காலத்திலே) வெளிப்படுத்தியும்
ஆராத தன்மையன் ஆய்	(இத்தகைய பல செயல்களாலே தனது திருக்குணங்களை வெளிப்படுத்தின வளவிலும்) த்ருப்தி பெறாமல் (ஸௌலப்யகுணத்தை நன்கு விளக்க வேண்டி)

ஒரு நாள்	ஒரு நாளில்
ஆங்கு ஆய்ப்பாடி	அந்தத் திருவாய்ப்பாடியிலே
சீர் ஆர் கலை அல்குல் சீர் அடி செம் துவர் வாய் வார் ஆர் வனம் முலையாள்	அழகிய சேலையை யணிந்த அல்குலையுடையவளும், அழகிய கால்களையுடையவளும், மிகவுஞ் சிவந்த அதரத்தையுடையவளும் கச்சணிந்த அழகிய முலைகளையுடையவளுமான யசோதை
மத்து ஆர பற்றிக்கொண்டு	மத்தை அழுந்தப் பிடித்துக்கொண்டு
ஏர் ஆர் இடை நோவ	அழகிய இடுப்பு நோகும்படி
எத்தனையோர் போதும் ஆய்	வெகு காலமாக
சீர் ஆர் தயிர் கடைந்து	சிறந்த தயிரைக் கடைந்து
திரண்ட வெண்ணெய் தனை	(அதில்) திரண்ட வெண்ணெயை
வேர் ஆர் நுதல் மடவாள்	(கடைந்த ச்ரமத்தாலே) வேர்வை மிக்க நெற்றியை யுடையளான அவ் யசோதை
வேறு ஓர் கலத்து இட்டு	வேறொரு பாத்திரத்திலே இட்டு
அதனை	அந்த வெண்ணெய்க் கலத்தை
நார் ஆர் உறி ஏற்றி	(விரல்கூட நுழைக்கவொண்ணாதபடி) நார் நெருக்கத்தையுடைய உறியின் மேலேற்றி
நன்கு அமைய வைத்து	ஸுரக்ஷிதமாம்படி வைத்துவிட்டு
போர் ஆர் வேல் கண் மடவாள்	யுத்தத்திற்கு ஸந்நத்தமான வேல் போன்ற (கூர்மையான) கண்களையுடையளான அவ் யசோதையானவள்
போம் தனையும்	வெளியில் போகிறவரைக்கும்
ஓராதவன் போல் பொய் உறக்கம் உறங்கி	ஒன்றுமறியாதவன்போலே திருட்டுத் தூக்கம் தூங்கி
அறிவு உற்று	(அவள் போனவுடனே) கண்விழித்தெழுந்து போய்

தார் ஆர் தட தோள்கள் உள் அளவும் கை நீட்டி	மாலையணிந்த பெரிய திருத் தோள்களைத் தாழியின் அடிவரையில் புக விட்டு
ஆராத வெண்ணெய் விழுங்கி	(எவ்வளவு உண்டாலும்) திருப்தியைத் தரமாட்டாத வெண்ணெயை அமுது செய்து
அருகு இருந்த	(அந்த வெண்ணெய்த் தாழியின்) பக்கத்தில் இருந்த
மோர் ஆர் குடம்	மோர் நிறைந்த குடத்தை
உருட்டி	(அதில் அநாதரம் தோற்ற) உருட்டி
முன் கிடந்த தானத்தே	முன்னே படுத்திருந்த இடத்திலேயே
ஓராதவன் போல்	ஒரு ஸமாசாரமும் தெரியாதவன் போன்று
கிடந்தானை	படுத்துக் கொண்டிருந்த கண்ணனை
அவளும் வாரா கண்டு	அவ் யசோதையும் வந்து கண்டு
தான் வைத்தது காணாள்	தான் (உறியிலே சேமித்து) வைத்த வெண்ணெயைக் காணாதவளாய்
வயிறு அடித்து	(இத்தனையும் தின்றால் ஜரிக்குமோவென்று) வயிற்றிலே மோதிக்கொண்டு
ஐயர் இவர் அல்லால்	இந்த மஹாநுபாவர் தவிர
இங்கு புகுதுவார் ஆர் ஆர்	இங்கே வந்தவர் வேறு யார்? (யாருமில்லை; இவரே தின்றிருக்க வேண்டுமென்று நிச்சயித்து)
இது செய்தீர் நீராம் என்று	‘இந்தக் காரியம் செய்தவர் நீர்தான்’ என்று சொல்லி
தீரா வெகுளியள் ஆய்	அடங்காத கோபத்தையுடையளாய்
ஓர் நெடு கயிற்றால்	கையிலகப்பட்டதொரு குறுங் கயிற்றால்
ஊரார்கள் எல்லாரும் காண	ஊரிலுள்ளாரனைவரும் (இந்த எளிமையைக்) காணும்படியாக

உரலோடே சிக்கன ஆர்த்து அடிப்ப	ஒரு உரலோடே அழுந்தக் கட்டி அடிக்க
ஆரா வயிற்றினேடு ஆற்ருதான்	மிகவும் வயிறெரிந்து வருந்தி நிற்பவன்;

—***—"உமக்கறியக் கூறுகேனே" என்ற கட்டுவிச்சி அங்ஙனமே விரிவாகக் கூறுகின்ருள்; "ஆராலிவ்வைய மடியளப்புண்டதுதான்" என்று தொடங்கி, "பேராயிர முடையான் பேய்ப்பெண்டீர் நும்மகளைத் தீராநோய் செய்தான்" என்னுமளவும் கட்டுவிச்சியின் வார்த்தை. இதில், எம்பெருமான் உலகமளந்தது, இலங்கையைப் பாழ்படுத்தியது, கோவர்த்தனமலை யெடுத்துக் கல்மழை காத்தது, கடல் கடைந்தது, பசுமேய்த்தது, உலகமெல்லா முண்டுமிழ்ந்தது, வெண்ணெய் களவு செய்து தாம்பினுல் கட்டுண்டது, காளியநாகத்தைக் கொழுப்படக்கியது, சூர்ப்பணகையின் அங்கபங்கம் செய்தது, கரனைக் கொன்றது, இராவணனைக் கொன்றது, இரணியனை முடித்தது, கஜேந்திராழ்வானைக் காத்தருளியது-ஆகிய சரித்திரங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வரிய பெரிய காரியங்களைச் செய்தருளின பரம புருஷன்தான் உங்கள் மகளைத் தீராநோய்க்கு ஆளாக்கினுன் என்று சொல்லி முடித்தாளென்க.

மாவலியைப் பாதாளத்தில் சிறை வைத்தும், குளவிக்கூடு போலே அசுர ராக்ஷஸர்கள் மிடைந்து கிடந்த இலங்கையை நீருக்கியும், கடல் கடைந்து அமுதமளித்தும், குன்றெடுத்துக் கோநிரை காத்தும், பிரபஞ்சங்களை ப்ரளயங் கொள்ளாதபடி நோக்கியும் இவ்வகைகளாலே அடியார்களுக்குப் பலவிதங்களான நன்மைகளைப் புரிந்து தனது திருக்கல்யாண குணங்களை நன்கு விளங்கச் செய்துங்கூட த்ருப்தி பெருத எம்பெருமான் தனது ஸௌலப்யமாகிற பெருங்குணத்தை வெட்ட வெளிச்சமாக்குவதற்காகவே வெண்ணெய் களவுசெய்த வியாஜத்தாலே உரலோடு கட்டுண்டதாகச் சொல்லுகிற அழகைப் பாருங்கள்.

ஆராத தன்மையனுய்="ரக்ஷ்ய வர்க்கத்தை யெல்லாம் ரக்ஷித்தாலும் தானென்றுஞ் செய்யாதானு யிருக்கிறபடி." என்பது பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி.

யசோதைப் பிராட்டியானவள் இடுப்பு நோகவும், நெற்றி வேர்க்கவும் மிக்க பரிச்ரமப்பட்டு நெடும்போது தயிர் கடைந்து,

திரண்ட வெண்ணெயை ஒரு கலத்திலே வைத்து உறியின்மேல் ஸம்ரக்ஷிதமாக்கியிட்டு ஏதோ காரியமாக அப்பால் சென்ருள்; நன்ருகத் தூங்குகின்றவன்போல் கள்ள நித்திரை செய்துகொண்டு, தாய் சேமித்து வைப்பவற்றைக் கண்டுகொண்டிருந்த கண்ணபிரான் உடனே எழுந்து வெண்ணெய்த் தாழியில் தனது இரண்டு கைகளையும் முழுக்க அமிழ்த்தி வெண்ணெயைவாரி அமுது செய்துவிட்டு அருகே மற்ருெரு குடத்தைக் கண்டான், அது நிறைய மோராயிருக்கவே அந்த மோர்க்குடத்தை உருட்டிவிட்டு உடனே முன்பு தான் கிடந்த படுக்கையிலே போய்ப்படுத்து "இந்தப் பூனையா இந்தப் பாலைக் குடித்தது!" என்ன வேண்டும்படி தான் ஒன்று மறியாதவன் போன்று நெடுங்குறட்டை விட்டுக்கொண்டு உறங்குவானுயினுன்; மீண்டுவந்த யசோதை உறியின்மேலே நோக்காகவே வந்து பார்த்தாள்; கையை இட்டாள்; எந்தப்படி வைத்தாளோ அந்தக் குறிப்படியே கண்டிலள். 'அத்தனை வெண்ணெயையும் தின்றுவிட்டானே, ஜரிக்குமோ' என்று வருத்தமுற்று வயிற்றிலே மோதிக்கொண்டு 'இந்த மஹாநுபாவர் தவிர வேறு இங்குவந்தார் ஆருமில்லை; இப்பெரியவர்தாம் இத்தனையும் எடுத்து அமுது செய்திருக்கவேணும்' என்று நிச்சயித்துக் கண்ணபிரானை நோக்கி 'ஸ்வாமிந்! நீர்தாம் இக்களவு செய்தீர், நானறிவேன்' என்று சொல்லிக் கையைப் பிடித்து, உறங்குகிறவனைத் தூக்கியெடுத்து, கையிலகப்பட்டதொரு கயிற்ருலே அவனை உரலோடே இணைத்து ஊரிலுள்ளா ரெல்லாருங் காண நெருக்கிக் கட்டி, அடங்காத கோபத்தையுடையவள் போன்று அடிக்க, அஸஹிஷ்ணுவாய் ஏங்கி வருந்திக் கிடந்த படியைச் சொல்லிற்ருயிற்று.

"சீரார் கலையல்குல்" இத்யாதி வாக்கியத்தில், யசோதை என்ற பெயரைச் சொல்லாமல் விசேஷணங்களை மாத்திரம் இட்டது—"ஞாலத்துப் புத்திரனைப் பெற்ருர் நங்கைமீர் நானே மற்ருருமில்லை" என்று அவள் தானே சொல்லிக்கொள்ளும்படியாகவும் "என்ன நோன்பு நோற்ருள்கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்று பிறரும் சொல்லும்படியாகவும் அமைந்த ஒப்புயர்வற்ற ஸௌபாக்கியம் அவளுக்கு அஸாதாரணமா யிருத்தலால் பரம விலக்ஷணர்களைப் பெயர் சுட்டிச் சொல்லலாகாதென்கிற முறைமை பற்றியென்க.

“தாரார் தடந்தோள்க ளுள்ளளவுங் கை நீட்டி” = “ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடல் நீர், நாழி முகவாது நானுழி” என்பதையுங்கூட அறியான் போலும்; அந்தோ! அறிவில்லாச் சிறு பிள்ளைத் தனத்தை நன்கு விளக்கினபடி. வெண்ணெய்த் தாழியில் ஆழ ஆழக் கையிட்டாலும் கை கொள்ளுமளவுக்குமேல் வெண்ணெய் வாராது என்றறியாமல் தோள்பட்டை வரைக்கும் தாழியினுள்ளே அமிழ்த்தினனும்.

தோள்களுள்ளளவும் கையை நீட்டினனென்பது யசோதைப் பிராட்டிக்கு எங்ஙனே தெரிந்தது? என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, “கோயிற்சாந்தைக் குடத்தின் விளிம்பிலே கண்டாள் கொலோ” என்று ரஸோக்தியாக பட்டர் அருளிச்செய்தாரென்பர்.

தானத்தே = தானம்—ஸ்தாநம் என்ற வடசொல் விகாரம். ஓர்தல்—அறிதல். வாரா—இறந்தகால வினையெச்சம்; வந்து.

வயிறடித்து = நெடுங்காலம் ச்ரமப்பட்டுத் திரட்டின வெண்ணெய் போயிற்றே யென்கிற வருத்தத்தாலல்ல; இத்தனை தின்றது இவனுக்கு ஜரிக்காதே என்கிற வருத்தத்தினல் வயிற்றிலே மோதிக்கொண்டாளென்க.

ஐயரிவரல்லால் = ‘இந்தப்பயலல்லால்’ என்ன வேண்டுமிடத்து, ஐயர் என்றும் இவர் என்றும் நீர் என்றும் சொன்னது கோபத்தின் மிகுதியாலென்க. ஆகவே, இங்கு, பால்வழுவமைதி; “உவப்பினு முயர்வினும் சிறப்பினும் செறலினும், இழிப்பினும் பால்திணை இழுக்கினு மியல்பே” என்ற நன்னூற் சூத்திரமறிக. (செறல்—கோபம்.)

நெடுங்கயிற்றல்—“கண்ணிநுண் சிறுத்தாம்பினல்” என்றும் “கண்ணியார் குறுங்கயிற்றல் கட்ட” என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகளோடு ஐககண்டியம் பண்ணவேண்டுதலால், இங்கு நெடுங்கயிறு என்றதை விபரீத லக்ஷணையாகக் கொண்டு சிறிய கயிறென்றே உரைத்தல் பொருந்தும். ‘அடிக்கடி இவள் நம்மைக் கயிற்றினுல் கட்டி நலிகின்றளே’! என்று கண்ணபிரான் க்ருஹத்திலுள்ள கயிறுகளை யெல்லாம் துண்டு துண்டாக அறுத்துப் போட்டு விடுவது வழக்கமாம். ஆகவே நீண்ட கயிறு யசோதைக்குக் கிடைப்பதரிது. அன்றியே, நெடுங்கயி றென்பதற்குப் பெரு மேன்மை

பொருந்திய கயிறென்றும் பொருள் கொள்ளலாம்; கண்ணபிரானு டைய திருமேனியிலே ஸம்பந்திக்கப் பெறுதல் கயிற்றுக்கு மேன்மை யென்க.

[ஊரார்களெல்லாருங்காண] இவன் உரலோடு கட்டுண்டு படு கிற பரிபவத்தை எல்லாருங் காண—என்று பொருள் கொள்வர் ஸாமாந்ய ஞானிகள்; அதுவன்று பொருள்; இவன் இப்படி கட் டவு மடிக்கவு மெளியனாய் வாய்த்திருக்கும் இந்த ஸௌலப்யத்தை எல்லாருங் காண வேணுமென்றாய்த்து யசோதை கருதிற்று. இங்ஙனொத்த ஸௌலப்யத்தை வெளியிட வேணுமென்று தானே கண்ணபிரான் இங்கே வந்து பிறந்தது. தாய் தாம்பாலே கட்டும் போது தாம்பு எட்டம் போராவிடில் இவன் தனது உடலைச் சிறுக் கடித்து அந்தச் சிறிய தாம்பினால் கட்டுண்டானும்படி பண்ணிக் கொள்ளுமவனிறே; "கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்" என்ற விடத்தில் இதுவேயிறே கருத்து.

தீரா வெகுளியளாய்=வெகுளி—கோபம்; இது அபிநயமாத் திரமென்க. "அஞ்சவுரப்பாளசோதை ஆணாட விட்டிட்டிருக் கும்" என்னப்பட்ட யசோதைக்குக் கோபம் மெய்யே உண்டாக மாட்டாதிறே.

ஆரா வயிற்றினோடாற்றாதான்=உரலோடு பிணைத்ததற்கும் அடித்ததற்குமாக வருந்தினானன்று; வெண்ணெயையும் பெண்க ளையும் களவு செய்கிற தொழிலைச் சற்றுப்போது விட்டிருக்க நேர்ந் ததே! என்று வருந்தினானென்க. அளவற அமுது செய்த வெண் ணெய் வயிற்றிலே ஜீர்ணமாகாமல் வருந்தினானென்னவுமாம்...... *

... ... அன்றியும்
நீரார் நெடுங்கயத்தைச் சென்றலைக்க நின்றுரப்பி
ஓரா யிரம்பண வெங்கோவிய நாகத்தை
வாரா யெனக்கென்று மற்றதன் மத்தகத்துச்
சீரார் திருவடியால் பாய்ந்தான்......—

பதவுரை

அன்றியும்	மேலும்
நீர் ஆர் நெடு கயத்தை சென்று	நீர் நிறைந்த பெரியதொரு பொய் கைக்குப் போய்

அலைக்க நின்று	அப்பொய்கையின் வெள்ளம் வெளி வழியும்படி (தன்னோராயிரம் பிள்ளைகளும் தானுமாகத்) திளைத்து
ஓர் ஆயிரம் பணம் வெங்கோ இயல் நாகத்தை	ஆயிரம் படங்களையுடையதும் யமன் போலக் கொடிய ஸ்வபாவத்தை யுடையதுமான காளிய நாகத்தை
உரப்பி	அதட்டி
எனக்கு வாராய் என்று	என்னோடு போர் செய்ய வா என்றழைத்து
மற்றதன் மத்தகத்து	அதன் தலை மீது
சீர் ஆர் திரு அடியால் பாய்ந்தான்	(தனது) அழகிய திருவடியால் பாய்ந்து நர்த்தனம் செய்தவன்;

—***—யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினால் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானத்துக்கு யோக்கியமாகாதபடி செய்த காளியனென்னும் கொடிய நாகத்தை ஸ்ரீக்ருஷ்ணன் தண்டிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின்மேலேறி அம்மடுவிற் குதித்து அப்பாம்பின் படங்களின் மேல் ஏறித் துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலி யடக்குகையில், மாங்கலிய பிக்ஷை யிட்டருளவேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாக கன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக்காளியனை உயிரோடு கடலிற்சென்று வாழும்படி விட்டருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது.

கயம்—கசம்; தடாகம். அலைக்கநின்று உரப்பி = நாலுபக்கத்தாலும் கரைக்குமேலே நீர்வழியும்படி கலக்கி என்றுமாம். ஓராயிரம் பணம் = "காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு, அவன் நீண் முடியைந்திலும் நின்று நடஞ்செய்து" என்று பெரியாழ்வார் திருமொழியில் ஐந்து படங்களாகச் சொல்லியிருக்க ஆயிரம் படங்களென்று இங்குச் சொன்னது— பயங்கரத்வத்தின் மிகுதியை விளக்குதற்கு அதிசயோக்தியாகச் சொன்னது என்னலாம்; கல்ப பேதத்தாலே பொருத்தவுமாம்.

வெங்கோவியல் = 'வெங்கோ, என்று யமனுக்குப் பெயர்; வெம்மை – கொடுமை; அதனையே ஸ்வபாவமாகக் கொண்ட, கோ— ப்ரபு; அப்படிப்பட்ட யமனைக் காளிய நாகத்திற்கு உவமைகூறினர். மற்று அதன் என்று பிரித்து, மற்று என்பதை அசைச்சொல்லாக்கவு மாம். மத்தகம்-மஸ்தகம் என்ற வடசொல்விகாரம். சீரார்திருவடி = மேலைத்தலைமறையோர்களது சென்னிக்கு ஆபரணமாக அமைய வேண்டிய சிறப்புப் பொருந்திய திருவடியை ஒரு துஷ்ட நாகத்தின் தலையிலே கொண்டு வைப்பதே! என்ற வயிற்றெரிச்சல் தோன்றும். ... ...

... ... தன் சீதைக்கு
நேராவ னென்றோர் நிசாசரிதான் வந்தாளைக்
கூரார்ந்த வாளால் கொடிமூக்குங் காதிரண்டும்
ஈரா விடுத்தவட்கு மூத்தோனை வெந்நரகம்
சேரா வகையே சிலைகுனித்தான் செந்துவர்வாய்
வாரார் வனமுலையாள் வைதேவி காரணமா
ஏரார் தடந்தோ ளிராவணனை ஈரைந்து
சீரார் சிரமறுத்துச் செற்றுகந்த செங்கண்மால்—

பதவுரை

தன் சீதைக்கு நேர் ஆவன் என்று	தனது தேவியான பிராட்டியோடே நான் ஸமானமாவேனென்று நினைத்து
ஓர் நிசாசரி வந்தாளை	(என்னை மணந்துகொள் என்று சொல்லிக்கொண்டு) ஓடிவந்த சூர்ப்பணகை யென்னும் ராக்ஷஸியை
கூர் ஆர்ந்த வாளால்	கூர்மை பொருந்திய கத்தியினால்
கொடி மூக்கும் காது இரண்டும் ஈரா விடுத்து	கொடிபோன்ற மூக்கையும் காதையும் அறுத்துத் துரத்திவிட்டு,
அவட்கு மூத்தோனை	அவளுடைய தமையனான கரனை
வெம் நரகம் சேரா வகையே சிலை குனித்தான்.	'இனி இவன் வேறொரு கொடிய நரகம்போய் வேதனை யநுபவிக்கவேண்டியதில்லை' யென்னும்படியாக ஸகல நரக வேதனைகளையும் போர்க்களத்திலே அவனுக்குத் தந்து வில்லை வளைத்துக் கொன்றொழித்தவன்;

செம் துவர் வாய்	மிகவும் சிவந்த அதரத்தை யுடைய வளும்
வார் ஆர் வனம் முலையாள்	கச்சு அணிந்த அழகிய முலையை யுடையவளுமான
வைதேவி காரணம் ஆ	ஸீதாபிராட்டிக்காக
ஏர் ஆர் தட தோள் இராவணனை	அழகிய பெரிய புஜங்களையுடையனை இராவணனை
சீர் ஆர் ஈர் ஐந்து சிரம் அறுத்து செற்று	சிறந்த பத்துத் தலைகளையும் அறுத்துக் கொன்று
உகந்த	(முனிவர்களுடைய விரோதியைத் தீர்த்தோமென்று) திருவுள்ள முகந்த
செம் கண் மால்	புண்டரீகாக்ஷன்;

—***—சூர்ப்பணகை யென்பவள் இராவணனுடைய தங்கை. தண்டகாரணியத்தில் குடியேறி அங்குள்ள வநவாஸிகளை வருத்திக் கொண்டு உல்லாஸமாகத் திரியுந் தன்மையுள்ள இவள், ஸ்ரீராமலக்ஷ்மணர் ஸீதையோடு கோதாவரிக்கரையில் பஞ்சவடியாச்ரமத்தில் வஸித்து வருகிறபொழுது ஒருநாள் இராமபிரானது திருமேனியழகைக் கண்டு பெருங்காதல் கொண்டு அழகிய வடிவமெடுத்து அருகில் வந்து தன்னைக் கூடும்படி பலவாறு வேண்டவும், அதற்கு அப்பெருமான் உடன்படாது பல கூறி மறுத்திட்டதனால் மிக வருந்தி மீண்டு 'ஒப்புயர்வில்லாத ஸௌந்தரிய முடைய மனைவி உடனிருத்தலால் அவளுள்ளவளவும் என்னை இவன் விரும்பான்; அவளை வஞ்சனையால் எடுத்துப் போய் மறைத்து வைத்துவிட்டால் நான் இவனுடன்கூடி வாழக்கூடும்' என்றெண்ணி மறுநாளுதயத்தில் வந்து இராமன் காலைக்கடன் கழிப்பதற்குத் தடாகம் நோக்கிச் சென்ற ஸமயம் பார்த்துச் சீதையைப் பிடிக்கத் தொடர்கையில், அப்பிராட்டிக்குக் காவலாக அருகிற் சோலையிலிருந்த லக்ஷ்மணன் கண்டு விரைந்து வந்து இவளது கூந்தலை ஒரு கையாற் பற்றிக்கொண்டு மற்றொரு கையால் உடைவாளை யெடுத்து அதனால் இவளது மூக்கையுங் காதையும் முலையையும் அறுத்துத் துரத்தி விட்டானென்ற வரலாறு அறியத் தக்கது. இச்செயல் செய்தது இளைய பெருமாளாயினும்

இதனைப் பெருமாள் செயலாகவே கூறுதலும் உண்டு; "சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவளார்க்க அரிந்தானைப் பாடிப்பற அயோத்திக் கரசனைப் பாடிப்பற" என்றார் பெரியாழ்வார்; "மலைபோலுருவத் தொரிராக்கதி மூக்கு அரிந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் அளை வெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே" என்றார் இத் திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில். இளைய பெருமாளைச் சொல்லுமிடத்து வால்மீகி முனிவர் "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" [ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:] என்றார்; அதாவது—லக்ஷ்மணனை ஸ்ரீராமபிரானது வலக்கையாகக் கூறினர். ஆகையால் சூர்ப்பணகாபங்கத்தைப் பெருமாளது செயலாகக் கூறுவது பொருந்துமென்க. தன் கையாலேயிறே தண்டித்தது.

அவட்கு மூத்தோனை = பூர்விக ராக்ஷஸச்ரேஷ்டனான ஸுமாலியின் மகளும், இராவணன்தாயான கேகஸியின் தங்கையும், இராவணனது தந்தையான விச்ரவமுனிவரையே கொழுநனாக அடைந்தவளும், (இங்குக் காட்டிய இருமுறையாலும்) இராவணனுக்குச் சிறியதாயுமாகிய கும்பீநஸியின் குமாரனாய், இராவணனுக்குத் தம்பிமுறையில் நிற்பவனான கரன், கேகஸியின்வயிற்றில் இராவண கும்பகர்ணர்கட்குப்பின் விபீஷணனுக்கு முன் பிறந்தவளான சூர்ப்பணகைக்குச் சிறியதாயின் மகனான முறையில் அவட்கு மூத்தோனெனப் பட்டானென்க. இவன், தண்டகாரணியத்திலே ஜநஸ்தானத்தில் சூர்ப்பணகை வஸிப்பதற்கென்று ஏற்படுத்திய ராஜ்யத்தில் அவளுக்குப்பாதுகாவலாகவும் அவளிட்ட கட்டளைப்படி நடப்பதற்காகவும் இராவணனால் நியமித்து வைக்கப்பட்ட பெரிய அரக்கர் சேனைக்கு முதற்றலைவன்.

ஸ்ரீராம லக்ஷ்மணர்களிடத்துக் கறுக்கொண்டு சென்ற சூர்ப்பணகை கரன் காலிலே விழுந்து புலம்பி முறையிட்டுத் தான் அங்கபங்கம் அடைந்த வரலாற்றைச் சொல்லி அழ, கரன் மிகப் பெரிய சேனையோடும் அறுபது லக்ஷம் படைவீரர்களோடும் சேனைத் தலைவர் பதினால்வரோடும் தூஷணன் த்ரிசிரஸ் என்னும் முக்கிய சேனாபதிகளோடும் புறப்பட்டு, அப்பொழுது ஸம்பவித்த துர்நிமித்தங்களை அகம்பநன் என்ற அறிவாளன் வந்து சொல்லித் தடுக்கவுங் கேளாமல் செருக்கி விரைந்து வந்து போர் தொடங்குகையில், இரா

மன் பர்ணசாலையினின்று வெளிப்பட்டு, போர்க்கோலங்கொண்ட லக்ஷ்மணனை விலக்கிச் சீதைக்குக் காவலாக வைத்துவிட்டுத் தான் தனியே எதிர்த்துச்சென்று பெரும்போர்செய்து பலரையுமழித்து, முடிவில் கரனைக் கொல்லும் பொருட்டு ஓர் அம்பு தொடுக்கத் தொடங்குகையில் இராமனது வில் முறிந்துவிடவே, இராமன் தன் கையைப் பின்னே நீட்டி வருணன் தந்த விஷ்ணு தநுஸ்ஸைப் பெற்று அதனை வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து முன்பு கரனது வலக்கையைத் துணித்துப் பின்பு கரனையும் துணித்து வெற்றி கொண்டானென்ற வரலாறு அறியத்தக்கது.

“வெங்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான்” என்றவிதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடும்—கரனை நரகத்துக்குப் போக வொட்டாமல் வீர ஸ்வர்க்கத்துக்குப் போகச் செய்தார் பெருமாள்—என்று. இப்பொருளை மறந்து விடுங்கள்; இங்ஙனல்ல பொருள். வளைந்த வில்லுங் கையுமாய் நின்ற பெருமானைக்கண்ட கரன் ‘நாம் மேலேபோய் வேறொருநரகயாதனை அநுபவிக்கவேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று’ என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடுபடுத்தினான் என்று பட்டர் அருளிச்செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்கு முன்னே மேல்நாட்டில் வாழுங் காலத்து பட்டருடைய சிஷ்யரொருவரை ஸந்தித்து வார்த்தையாடும்போது ‘எங்களுடைய திவ்ய ப்ரபந்தத்திலே அவட்கு மூத்தோனை வெங்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான் என்றிருக்கிறது, இதற்கு வேதாந்திகளே! நீங்கள் என்னபொருள் சொல்லுவீர்கள்?’ என்று கேட்க, அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, ‘உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்?’ என்று கேட்க, இங்ஙனே சொல்லுவர் என்று அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்கவேணுமென்று அவருக்குக் காதல் கிளர்ந்ததாகப் பெரியோர் கூறுவர். பட்டருடைய அருளிச் செயலாக நஞ்சீயர் கேட்டு விஸ்மயப்பட்ட அர்த்த விசேஷங்கள் பலவற்றுள் இதுவுமொன்றென்க.

சிலை குனித்தானென்றது—கொன்றானென்றபடி: மங்கல வழக்கு. பிராட்டிக்காக இராவணனைக் கொன்றொழித்தபடியைக் கூறுகின்றாள் சேந்துவர்வாயென்று தொடங்கி. ... ... *

போரார் நெடுவேலோன் பொன்பெயரோ னாகத்தைக்
கூரார்ந்த வள்ளுகிராற் கீண்டு குடல்மாலை
சீரார் திருமார்பின் மேற்கட்டிச் செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள்கொட்டி
ஆரா வெழுந்தா னரியுருவாய்......—

பதவுரை

போர் ஆர் நெடு வேலோன் பொன் பெயரோன் ஆகத்தை	(எப்போதும்) யுத்தத்திலே பொருந்தி யிருக்கிற நீண்ட வேலாயுதத்தை யுடையனான ஹிரண்யனுடைய உடலை
அரி உரு ஆய்	நரஸிம்ஹரூபியாகி
கூர் ஆர்ந்த வள் உகிரால் கீண்டு	கூர்மை மிக்கு நெருங்கின திருநகங்களாலே பிளந்து
குடல்	அவ்வசுரனுடைய குடலை (பிடுங்கி யெடுத்து)
சீர் ஆர் திரு மார்பின் மேல் மாலை கட்டி	அழகிய பிராட்டிக்கு இருப்பிடமான மார்பிலே வெற்றிமாலையாக அணிந்து கொண்டு
செம் குருதி சோரா கிடந்தானை	சிவந்த ரக்தவெள்ளம் பெருகக்கிடந்த அவ்வசுரனை
குங்குமம் தோள் கொட்டி	குங்குமச் சேற்றினாலே அலங்கரிக்கப் பட்டுள்ள தனது திருத்தோளின்மேல் அறைந்து கொண்டு
ஆரா எழுந்தான்	ஆரவாரஞ் செய்துகொண்டு எழுந்தவன்;

—***—தனித்தனி தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமில்லாதபடி வரம் பெற்றவனும் ஹிரண்யாக்ஷனது உடன் பிறந்தவனுமான ஹிரண்யகசிபு, தேவர்முதலிய யாவர்க்குங் கொடுமைகளியற்றித் தன்னையே கடவுளாக அனைவரும் வணங்கும்படி செய்து வருகையில், அவனது மகனான ப்ரஹ்லாதாழ்வான் இளமை தொடங்கி மஹாவிஷ்ணு பக்த

ஞய், தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன் பெயர் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயண நாமஞ் சொல்லி வரவே, கடுங்கோபங் கொண்ட ஹிரண்யன் ப்ரஹ்லாதனைத் தன் வழிப்படுத்துதற்குப் பலவாறு முயன்றபின் அங்ஙனம் வழிப்படாத அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயஞ் செய்தும் அவன் பகவான் அருளால் இறந்திலனாக, ஒருநாள் சாயங்காலத்தில் தந்தை மைந்தனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன்? காட்டு' என்ன, அப்பிள்ளை " தூணிலுமுளன், துரும்பிலுமுளன், எங்குமுளன் " என்று உறுதியாய்ச்சொல்ல, உடனே இரணியன் 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரில் நின்ற தூணைப் புடைக்க, அதிலிருந்து திருமால் உடனே மனிதரூபமும் சிங்க வடிவமுங்கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாசற்படியில் தன்மடிமீது வைத்துக்கொண்டு தனது திருக்கை நகங்களால் அவன் மார்பைப் பிளந்து குடலைப் பறித்து விஜயலக்ஷ்மி விளங்குகிற திருமார்பிலே மாலையிட்டு, ரக்தவெள்ளம் கொழிக்கும்படி கிழிக்கப்பட்ட அவனை—பிராட்டிமாரோடே ஸம்ச்லேஷிப்பதற்கு அலங்கரித்த திருத்தோளின்மேலே எடுத்து அறைந்துகொண்டு 'ஆச்ரிதவிரோதி ஒழிந்தான்' என்று ஆரவாரஞ் செய்து ப்ரஹ்லாதனுக்கு அருள்செய்தமை அறியத் தக்கது.

பொன் பெயரோன் = இது லக்ஷித லக்ஷணை; ஹிரண்யம் என்ற வடசொல் பொன் எனப் பொருள்படும்.

ஆரா—செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த காலவினையெச்சம்: ஆர்த்து என்றபடி; ஆரவாரஞ் செய்து. ... .

... ... அன்றியும்
பேர்வாம ஞகிய காலத்து மூவடிமண்
தாரா யெனக்கேன்று வேண்டிச் சலத்திஞல்
நீரேற் றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை—

பதவுரை

அன்றியும்	அது தவிரவும்,
பேர் வாமன் ஆகிய காலத்து	மிகச்சிறிய வாமநனாகத் திருவவதரித்த காலத்தில்
மா வலியை	மஹாபலியினிடத்து

மூ அடி மண் எனக்கு தாராய் என்று வேண்டி	'மூவடி நிலம் எனக்குக் கொடு" என்று யாசித்து
நீர் ஏற்று	அவன் தாரை வார்த்து தத்தம்பண்ண அதனைப் பெற்று.
சலத்தினால்	சிறிய அடியைக் காட்டிப் பெரிய அடியாலே அளப்பதாகிய கபடத்தினாலே
நின்று	நிமிர்ந்து
உலகு எல்லாம் அளந்தான்	லோகங்களை யெல்லாம் அளந்து ஸ்வாதீனப் படுத்திக் கொண்டவன்;

—***—மஹாபலி யென்னும் அஸுரராஜன் தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று மூன்று உலகங்களையும் தன் வசப்படுத்தி அரசாட்சி செய்துகொண்டு செருக்குற்றிருந்தபொழுது அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அப்பெருமான் குள்ள வடிவான வாமநாவதாரங்கொண்டு காச்யப மாமுனிவனுக்கு அதிதி தேவியினிடந் தோன்றிய ப்ராஹ்மண ப்ரஹ்மசாரியாகி,—வேள்வி யியற்றி யாவர்க்கும் வேண்டிய அனைத்தையுங் கொடுத்துவந்த அந்த மாவலியிடஞ் சென்று, தவஞ் செய்தற்குத் தன் காலடியால் மூவடிமண் வேண்டி, அது கொடுத்தற்கு இசைந்து அவன் தாரை வார்த்துத் தத்தஞ் செய்த நீரைக் கையிலேற்று உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியாற் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையுமளந்து, தானமாகப் பெற்ற மற்றோரடிநிலத்திற்கு இடமில்லையாகவே அதற்காக அவன் வேண்டுகோளின்படி அவனது முடியில் அடியை வைத்து அவனைப் பாதாளத்தி லழுத்தி அடக்கின வரலாறு அறியத்தக்கது.

"பேர் வாமனாகிய காலத்து" என்ற பாடம் வெண்டளைக்குச் சேராதாகையாலும் ப்ராசீநபாடமன்றாகையாலும் மறுக்கத்தக்கது. வாமனாகிய என்பதே பாடம். வாமன்—வாமநன்; சிதைவு. "சீராற் பிறந்து சிறப்பால் வளராது, பேர் வாமனாகாக் கால் பேராளா" என்ற பெரிய திருவந்தாதியும் நோக்கத்தக்கது. பேர்வாமன் = வாமநர்களுக்குள்ளே பெருமை பெற்றவன் என்றாய், மிகச்சிறிய வாமநனென்றதாயிற்று.

சலத்தினல்=ச்லம் என்ற வடசொல் க்ருத்ரிம மெனப் பொருள்படும்; கபடமாக என்றபடி ... ... *

ஆராத போரி லசுரர்களுந் தானுமாய்க்
காரார் வரைநட்டு நாகங் கயிருகப்
பேராமல் தாங்கிக் கடைந்தான் திருத்துழாய்த்
தாரார்ந்த மார்வன் ... ...—

பதவுரை

ஆராத போரில்	முடியமாட்டாத தேவாஸுர யுத்தத்திலே
அசுரர்களும் தானும் ஆய்	அஸுரர்களும் தானுமாக
கார் ஆர் வரை நட்டு	மேகம் படிந்த மந்தரமலையைக் கொண்டுவந்து (மத்தாக) நாட்டி
நாகம் கயிறு ஆக	வாசுகி நாகத்தைக் கடை கயிருகச் சுற்றி
பேராமல் தாங்கி	அம்மலையானது மேலே கிளம்பாதபடி முதுகில் தரித்துக்கொண்டு
திரு துழாய் தார் ஆர்ந்த மார்வன் கடைந்தான்	திருத்துழாய் மாலையணிந்த திருமார்பையுடையனுய்க்கொண்டு கடைந்தவன்;

—***—முன் ஒரு காலத்தில், இவ்வண்ட கோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணு லோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப் பெற்ற ஒரு வித்தியாதர மகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கை வீணையில் தரித்துக் கொண்டு ப்ரஹ்மலோக வழியாய் மீண்டு வருகையில், துர்வாஸ மஹாமுநி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க அவ்விஞ்சை மங்கை அம்மாலையை அம் முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம் முனிவன் ஆநந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம் மாலையைக் கை நீட்டிக்

கொடுக்க, அவன் அதனை மாவட்டியினால் வாங்கி அந்த யானையின் பிடரியின் மேல் வைத்த வளவில் அம் மதவிலங்கு அதனைத் துதிக் கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத் தது; அதுகண்டு முனிவரன் கடுங் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற நினது ஐச்வரியங்களெல் லாம் கடலில் ஒளிந்துவிடக் கடவன' என்று சபிக்க, உடனே தேவர்களின் செல்வம் யாவும் ஒழிந்தன; ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட் டளையிட்டபடி, அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தர மலையை மத் தாக நாட்டி வாஸுகி யென்னும் மஹா நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிப் பாற் கடலைக் கடையலாயினர். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளி னால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம் மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன் என்ற வரலாறு அறி யத் தக்கது.

கடலைக் கடைகிறபோது தோளுந் தோள் மாலையுமாய் நின்று கடைந்தருளினனாதலால் அதனை அநுபவித்துச் சொல்லுகிறாள் **திருத்துழாய்த தாரார்ந்த மார்வன்** என்று. கடைகிறபோது தேவர் கள் 'அமுதம் எப்போது கிளரப்போகிறது!' என்று அதில் நோக் காகக் கவிழ்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்களே யன்றி எம்பெரு மானது தோளுந் தோள்மாலையுமான திவ்யாலங்காரத்திலே கண் வைத்து ஸேவிக்கப் பெற்றிலர் என்ற குறை தீர, தான் அதில் ஈடு பட்டுப் பேசுகிறாள் போலும். ... ...

... ... தடமால் வரைபோலும்
போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலறி
நீரார் மலர்க்கமலங் கொண்டோர் நெடுங்கையால்
நாரா யணனே! மணிவண்ணா நாகணையாய்!
வாராய் என்னாரிடரை நீக்கா யெனவேகுண்டு
தீராத சீற்றத்தாற் சென்றிரண்டு கூறாக

ஈரா வதனை யிடர்கடிந்தா னெம்பெருமான்
பேரா யிரமுடையான் பேய்ப்பெண்டீர் நும்மகளைத்
தீரா நோய்செய்தா னெனவுரைத்தாள்......—

பதவுரை

தடம் மால் வரை போலும் போர் ஆனை	மிகப்பெரிய மலை போன்ற மத்தகஜ மானது
பொய்கை வாய் கோள் பட்டு நின்று அலறி	நீர் நிலத்திலே முதலையின் வாயிலகப் பட்டு நின்று வருந்தி
ஓர் நெடு கையால் நீர் ஆர் கமலம் மலர் கொண்டு	நீண்ட ஒரு துதிக்கையினால் அப்போ தலர்ந்த தாமரைப் பூக்களை எடுத்துக் கொண்டு
ஓ நாராயணா! மணி வண்ணா நாக அணையாய் வாராய் என் ஆர் இடரை நீக்காய் என	"நாராயணனே! நீலமணிவண்ணனே! சேஷசயனனே! வந்தருளவேணும்; எனது பெருந்துக்கத்தைப் போக்கியருளவேணும்" என்று கூவ, (அக் கூக்குரலைக் கேட்டு)
வெகுண்டு	(கஜேந்திர விரோதியின்மேல்) கோபித்து
தீராத சீற்றத்தால் சென்று	அடங்காத அக்கோபத்தோடே (பொய்கைக் கரைக்கு) எழுந்தருளி
இரண்டு கூறு ஆக ஈரா	(முதலையை) இருதுண்டமாகப் பிளந்து
அதனை இடர் கடிந்தான் எம்பெருமான்	அந்த கஜேந்திரனுடைய துன்பத்தைப் போக்கடித்த எம்பெருமான்
பேர் ஆயிரம் உடையான்	(இப்படிப்பட்ட அளவற்ற காரியங்களுக்கு வாசகமான) ஸஹஸ்ர நாமங்களை யுடையவன்; (அவ்வெம்பெருமான்தான்)
பேய் பெண்டீர் நும் மகளை தீரா நோய் செய்தான் என உரைத்தாள்	அறிவுகெட்ட பெண்டுகளே! உங்கள் மகளுக்கு (இப்படிப்பட்ட) தீராத நோயை உண்டுபண்ணினான்காண்மின் என்று சொல்லி முடித்தாள் (கட்டுவிச்சி);

—***—மிக்க விஷ்ணுபக்தியுடையனான இந்த்ரத்யும்ந னென்னும் அரசன் வழக்கப்படி ஒருநாள் விஷ்ணுபூஜை செய்துகொண்டிருந்தபோது அகஸ்திய மஹா முனிவன் அவனிடமெழுந்தருள, அப்பொழுது அவன் தன் கருத்து முழுவதையும் பகவதாராதநத்தில் செலுத்தியிருந்ததினால் அம்மஹர்ஷியின் வருகையை அறிந்திடானாய் அவனுக்கு உபசார மொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன், தன்னை அரசன் அலக்ஷியஞ் செய்தானென்று மாறாகக் கருதிக் கோபித்து 'நீ யானை போலச் செருக் குற்றிருந்ததினால், யானையாகக் கடவை' என்று சபிக்க அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினனாயினும் முன் செய்த விஷ்ணு பூஜையின் மஹிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களைக்கொண்டு திருமாலை அர்ச்சித்துப் பூஜித்து வருகையில், ஒரு நாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப் பறித்தற்குப் போய் இறங்கிய பொழுது, அங்கே முன்பு நீர்நிலையில் நின்று தவஞ் செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றி யிழுத்து அதனாற் கோபங் கொண்ட அவனது சாபத்தாற் பெரிய முதலையாய்க் கிடந்த ஹூஹூவென்னுங் கந்தர்வன் அவ் யானையின் காலைக் கௌவிக் கொள்ள அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திரன் 'ஆதி மூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்ராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்று விடுவித்து அதன் கையிலிருந்த தாமரைப் பூவையும் தனது திருவடிகளிலே சாத்தப் பெற்று இறுதியில் அதற்கு முக்தியை அருளினன் என்ற வரலாறு அறிக.

போரானை="யுத்தோந்முகனாய்த் திரிகிறானன்றிறே; செருக்காலே மலைகளோடே பொருது திரிகிறபடி." என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்க.

"நாராயணா ஓ — வாராய்"= பெரியாழ்வார் திருமொழியில் "பதக முதலைவாய்ப்பட்டகளிறு, கதறிக் கைகூப்பி என் கண்ணா கண்ணா வென்ன" என்ற விடத்து வியாக்கியான மருளிச்செய்கின்ற மணவாள மாமுனிகள்—" 'நாராயணா ஓ மணி வண்ணா நாக

ணையாய் வாராய்' என்று கூப்பிட்டானாக அருளிச்செய்தார் திருமங்கையாழ்வார்; இவர் 'என் கண்ணா கண்ணா' என்று கூப்பிட்டானாக அருளிச்செய்தார்; "మూలేతి ముక్తపదమాలపతి ద్విపేంద్రే" [மூலேதி முக்தபத மாலபதி த்விபேந்த்ரே] என்று கொண்டு 'மூலமே' என்று கூப்பிட்டானாகப் பௌராணிகர் சொன்னார்கள்; இவை, தன்னில் சேரும்படி என்னென்னில்; மூலம் என்கிற விடத்தில் அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனான ஆகாரத்தை நினைத்துக் கூப்பிட்டானாகையாலே அதுக்குப் பர்யாய சப்தங்களையிட்டு ஆழ்வார்களருளிச் செய்தார்களாகையால் எல்லாம் தன்னில் சேரக் குறையில்லை" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கே அநுஸந்திக்கத் தகும்.

ஆரிடரை நீக்காய் = முதலைவாயிலகப்பட்டுப் படுகிற துக்கத்தை நீக்க வேண்டுகின்றானல்லன் கஜேந்திராழ்வான் கையில் பறித்து வைத்துக்கொண்டிருக்கிற செந்தாமரைப்பூ செவ்வியழிவதற்குமுன்னே எம்பெருமானது திருவடிகளில் சாத்தப்பெறவேணுமென்பதே அவனது அபிநிவேசமாதலால் அவ்வபிநிவேசம் நிறைவேறப்பெறாமையால்வந்த துக்கத்தை நீக்கச்சொல்லுகிற வித்தனை. "నాహం కళేబరస్యాస్య త్రాణార్థం మధుసూదన। కరస్థకమలాన్యేవ పాదయోరర్పితుం హరేః." [நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந—கரஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் ஹரேஃ] என்றது காண்க. இவ்வுடம்பைக் காப்பாற்றிக்கொள்ள நான் கரையவில்லை; கையிலுள்ள தாமரைப் பூவைத் திருவடிகளில் ஸமர்ப்பிக்க வேணுமே என்றே கரைகின்றேனென்றவாறு.

ஈரா = இறந்த கால வினையெச்சம்; ஈர்ந்து என்றபடி. அதனை இடர் கடிந்தான் = அந்த ஸ்ரீகஜேந்திராழ்வான் கையிலிருந்த தாமரைப்பூக்களைத் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப் பெற்றுக்கொண்டானென்றபடி.

இப்படி சில திவ்ய சேஷ்டிதங்களைச் சொல்லி, இப்படிப்பட்ட பல்லாயிரம் திவ்ய சேஷ்டிதங்களுக்கு வாசகமான ஆயிரம் திருநாமங்களையுடைய பெருமான் உங்கள் மகளை நோவுபடுத்தினவன் காண்மின் என்று கட்டுவிச்சி கூறித் தலைக்கட்டினாளாயிற்று. இந்நோய் தீருவதற்கு உபாயமென்னவென்று விசாரிக்கிறவர்களை

நோக்கித் "தீரா நோய் செய்தான்" என்று சொல்லுகிறபடி பாருங்கள். வேறுவிதமான நோயாகிலன்றோ அது தீரவேணு மென்று அவர்கள் சிந்திப்பர்கள்; ஸர்வேச்வரனடியான நோயென்று தெரிந்தவாறே அவர்கள் 'இந்நோய் தீராமல் நித்ய மாய்ச் செல்லவேணும்' என்று மநோரதிப்பர்களாதலால் அவர்க ளது கருத்துக்கு இணங்கத் தீரா நோய் என்றுளென்க. தீரா நோயாவது பக்தி. இது ஆத்மாவுள்ளவரையில் தொடர்ந்து செல் லக்கடவது; ப்ராப்தி தசையிலும் அநுவர்த்திக்குமிறே. [கட்டுவிச் சியின் பேச்சு முற்றிற்று. இனி, பரகால நாயகியின் நிர்வேதம்.] *

... ... சிக்கனமற்று
ஆரானு மல்லாமை கேட்டேங்க ளம்மனையும்
போரார்வேற் கண்ணி ரவனாகில் பூந்துழாய்
தாரா தொழியுமே தன்னடிச்சி யல்லளேமற்று
ஆரானு மல்லனே யென்றொழிந்தாள்......—

பதவுரை

எங்கள் அம்மனையும்	(அதற்குமேல்) என்னுடைய தாயா னவள்
மற்று ஆரானும் அல்லாமை சிக்கன கேட்டு	வேறு எந்த தேவதாந்தரமும் இந்த நோய்க்குக் காரணமல்ல வென்பதை த்ருடமாகக் கேட்டுக்கொண்டு
போர் ஆர் வேல் கண்ணீர்!	யுத்தத்திலே பொருந்தின வேல் போன்ற கூரிய கண்களையுடைய தோழிமார்களே!
அவன் ஆகில்	(இந்நோய் செய்தவன்) அந்த எம் பெருமானே யாகிற பக்ஷத்தில்
பூ துழாய் தாராது ஒழியுமே	(இவளுக்கு உத்தேச்யமான) திருத் துழாய்ப் பிரஸாதத்தைத் தந்தருளா மற்போவனோ;
தன் அடிச்சி அல்லளே	(இவள்) அவன் றனக்கு அடிமைப்பட் டவளன்றோ;

மற்று ஆரானும் அல்லனே என்று ஒழிந்தாள் } (தைவாதீனமாக) வேறொருவனும் இந்நோய் செய்தவனன்றே என்று சொல்லிவிட்டு விசாரமற்றொழிந்தாள் (என்தாய்);

—***—இங்ஙனே கட்டுவிச்சி சொல்லி முடித்தவுடனே என்தாயானவள் "அடி குறத்தி! இந்நோய் செய்தது அந்த பரதேவதை தானே, வேறொரு தேவதாந்தரமு மன்றே, இது ஸத்யந்தானு?" என்று பலதடவை கேட்டு அவனேதானென்பதை த்ருடமாகத் தெரிந்துகொண்டு "புவனி யெல்லாம் நீரேற்றளந்த நெடியபிரானருளாவிடுமே" என்கிற விச்வாஸந்தோற்ற "இனி நாம் இவள் திறத்துக் கவலைப்படக் காரணமில்லை; இந்நோய் செய்தவன் அப் பெருமானேயாயிருக்கிற பக்ஷத்தில், தனது தாஸபூதையான இவளை ஒரு காலும் கைவிடமாட்டான்; "தன் மன்னு நீள்கழல் மேற்றண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என்றபடி திருத்துழாய்ப் பிரசாதந் தந்து அருள் செய்தே தீருவன்; மற்ற தேவதாந்தரமாகி லன்றோ நாம் அஞ்சவேண்டுவது; எம்பெருமானே யென்று நமக்கு ஸத்யமாகத் தெரிந்தபின்பு இனி என்ன கவலை?" என்று சொல்லிவிட்டு விசாரமற்றுப் போய்விட்டாள்.

"போரார் வேற்கண்ணீர்" என்றது—அசற் பெண்டுகளைப் பார்த்துத் தாய் பண்ணின ஸம்போதநம். ... ... *

... ... நானவனைக்
காரார் திருமேனி கண்டதுவே காரணமாப்
பேராப் பிதற்றாத் திரிதருவன் பின்னையும்
ஈராப் புகுதலு மிவ்வுடலைத் தண்வாடை
சோரா மறுக்கும் வகையறியேன் சூழ்குழலார்
ஆரானு மேசுவ் ரென்னு மதன்பழியை
வாராமல் காப்பதற்கு வாளா விருந்தொழிந்தேன்—

பதவுரை

நான் — நானோவென்றால்

அவனை கார் ஆர் திரு மேனி கண்டதுவே காரணம் ஆ } அவனது கரியதிருமேனியை ஸேவித்தது முதலாக

பேரா பிதற்றா திரிதருவன்	உருமாறி வாய்வெருவிக்கொண்டு திரியா நின்றேன்;
பின்னையும்	அதற்குமேல்,
தண் வாடை	குளிர்ந்த காற்றானது
இ உடலை ஈரா புகுதலும்	(எனது) இவ்வுடம்பைப் பிளந்து கொண்டு உள்ளே புகுந்து
சோரா மறுக்கும்	தளர்த்தியை யுண்டாக்கித் துன்பப் படுத்துகின்றது;
வகை அறியேன்	ஹிம்ஸிக்கும் ப்ரகாரங்களைப்பகுத்துச் சொல்ல வறிகின்றிலேன்;
சூழ் குழலார் ஆரானும்	நிறைந்த கூந்தலையுடைய பெண்கள் யாராகிலும்
ஏசுவர் என்னுமதன் பழியை	அலர் தூற்ற, அத்தால் வரும் அபவாதத்தை
வாராமல் காப்பதற்கு	தடுத்துக்கொள்வதற்காகவே
வாளா இருந்தொழிந்தேன்	(இதுவரை) ஒன்றும் செய்யாமலிருந்துவிட்டேன்;

—***—எனது தாய்மாத்திரம் கவலையற்றுக் கையொழிந்தாளேயொழிய, நான் கவலை தீரப்பெற்றிலேன், என் துக்கம் துலையப் பெற்றிலேன் என்கிறாள் பரகால நாயகி. ஸகல தாபங்களையும் தணிக்குமதான அவனுடைய திவ்ய திருமேனியை அன்றொருநாள் நான் காணப்பெற்றது முதலாக, நிலை குலைந்து வாய்வந்தபடி கண்டவா பிதற்றிக்கொண்டு திரிபவளாயினேன். கள் குடித்த குரங்குக்குத் தேள்கடியும் நேர்ந்தாற்போலே குளிர்ந்த வாடைக்காற்றும் பாவியேனுடலை அறுத்துக்கொண்டே உள்ளே புகுந்து துன்பப்படுத்தாநின்றது; சித்ரவதை பண்ணுநின்றது; அது செய்கிற வகைகள் வாசாமகோசரம்.

அன்றைக்கே நான் மடலூரப் புறப்பட்டிருக்கவேண்டும்; ஸஜாதீயைகளான ஸ்த்ரீகள் யாராவது நிறக்கேடான வார்த்தைகளைச்சொல்லி நம்மை ஏசுவார்களே யென்று லோகாபவாதத்துக்கு அஞ்சி இதுவரையில் மடலூராதே வீணே காலங்கழித்தேன்.... *

வாராய் மடநெஞ்சே வந்து மணிவண்ணன்
சீரார் திருத்துழாய் மாலே நமக்கருளித்
தாரான் தருமேன் றிரண்டத்தி லொன்றதனை
ஆரானு மொன்னுதார் கேளாமே சொன்னக்கால்
ஆராயு மேலும் பணிகேட் டதன்றெனிலும்
போரா தொழியாதே போந்திடுநீ யென்றேற்குக்
காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாரதே யென்னை மறந்ததுதான் வல்வினையேன்
ஊரா ருகப்பதே யாயினேன்......—

பதவுரை

மட நெஞ்சே	"அறிவு கெட்டுக் கிடக்கிற மனமே!
வாராய்	(தூது போக) எழுந்திரு;
வந்து	அவ்வெம்பெருமான் பக்கலிலே சென்று
மணி வண்ணன்	நீலமணிபோன்ற வடிவையுடையனான அவ்வெம்பெருமான்
நமக்கு அருளி	நம்மேல் க்ருபை பண்ணி
சீர் ஆர் திரு துழாய் மாலே	சிறந்த திருத்துழாய் மாலேயை
தரும் தாரான் என்ற இரண்டத்தில் ஒன்றதனை	தருவன் தரமாட்டான் என்ற இரண்டு வார்த்தைகளில் ஏதாவதொரு வார்த்தையை (அவன் சொல்லும்படி நான் சொல்லியனுப்புகிற சொல்லே)
ஒன்னுதார் ஆரானும் கேளாமே சொன்னக்கால்	அவனையுகவாதவர்கள் எவரும் கேளாதபடி நீ சொன்னுயாகில்,
பணி கேட்டு	அவ்வார்த்தையைக் கேட்டு
ஆராயுமேலும்	(அன்புடன்) விசாரித்தானுகிலும் சரி
அது அன்று எனிலும்	அந்த ஸங்கதியே நமக்குத் தெரியாதென்று நிரஸ்கரித்தாலும் சரி,
நீ போராதொழியாதே போந்திடு	நீ இங்கே வாராது அங்கேயே தங்கிவிடாமல் உடனேவந்து சேர்ந்துவிடு"

என்றேற்கு	என்றுசொன்ன என்பேச்சுக்கு உடன்பட்டு
கார் ஆர் கடல் வண்ணன் பின் போன	கரிய கடல் வண்ணன் பக்கலிலே சென்ற
நெஞ்சமும்	எனது மனந்தானும்
வாராதே	திரும்பி வருதலின்றியே
என்னை மறந்ததுதான்	என்னை மறந்து அங்கேயே தங்கிவிட்டதையோ!
வல் வினையேன்	கொடும்பாவியாகிய நான்
ஊரார் உகப்பதே ஆயினேன்	ஊரார் ஸந்தோஷிக்கும்படியாகவே நிலை குலைந்தேன்;

—***—பரகால நாயகி தனது நெஞ்சைத் தூதுவிட்டுப் பட்ட பரிபவத்தைப் பேசுகின்றாள்.—அறிவு மாண்டுகிடக்கிற நெஞ்சே! எழுந்திரு; தன்னைப்பிரிந்தார் மடலெடுக்கவேண்டும்படியான வடிவு படைத்த அவன் பக்கல் சென்று 'திருத்துழாய் ப்ரஸாதம் நமக்குக் கொடுக்க முடியுமா? முடியாதா? இரண்டத்தொன்று சொல்லிவிடு' என்று ஏகாந்தமாகக்கேள்; அதற்கு அப்பெருமான் ஆதரவு தோற்ற விசாரித்து நல்ல மறுமாற்றம் சொன்னாலும் சரி, அவளாரோ எனக்குத் தெரியாது என்று அநாதரமாகச் சொல்லிவிட்டாலும் சரி; ஏதோவொரு கருத்தைத் தெரிந்துகொண்டு அங்கு விளம்பித்து நிற்காதே கடுக என்பால் மீண்டுவா' என்று சொல்லி எனது நெஞ்சை அவனிடத்துப் போகவிட்டேன்; சர்க்கரைப்பந்தலில் தேன்மழை பொழிந்ததென்று மகிழ்ந்து அந்தப் படுபாவி நெஞ்சு சடக்கெனப் புறப்பட்டுப் போயிற்று. அதுதான் கடல் வண்ணன் பின்னே போயிற்றாகையாலே 'கடல்புக்கது திரும்பாது' என்றபடி என்னை மறந்து அங்கேதானே படுகாடு கிடக்கின்றது! என வருந்துகின்றாள். என் நெஞ்சமே எனக்குத் துணையாகப் பெறாத யான் வேறு யாரை வெறுப்பேனென்றதாம்.

நெஞ்சை லௌகிக பதார்த்தங்களிற் செலுத்தி ஒருவாறு போதுபோக்க வொண்ணாதபடி அவ்வெம்பெருமான்றனே இடைவிடாது சிந்தாவிஷய மாகிறானென்று இதனாற் குறிப்பிட்டபடி.

“నపుంసకమితి జ్ఞాత్వా తాం ప్రతి ప్రేషితం మనః। తత్తు తత్రైవ రమతే హతాః పాణినా వయమ్.” [நபும்ஸகமிதி ஜ்ஞாத்வா தாம் ப்ரதி ப்ரேஷிதம் மநஃ— தத்து தத்ரைவ ரமதே ஹதாஃ பாணிநாவயம்] என்ற ஒரு கவியின் சமத்காரத்தை இங்கே நினைக்க.

பிள்ளைப் பெருமாளையங்கார் திருவரங்கக் கலம்பகத்தில், “நீரிருக்க மடமங்கைமீர்! கிளிகள்தாமிருக்க மதுகரமெலாம் நிறைந்திருக்க மடவன்ன முன்ன நிரையாயிருக்க வுரையாமல் யான், ஆரிருக்கிலு மென்னெஞ்ச மல்லதொரு வஞ்சமற்ற துணையில்லை யென்றுதாத்தினொடு தூதுவிட்ட பிழையாரிடத் துரைசெய் தாறுவேன், சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே திருத்துழாய்தரில் விரும்பியே கொடுதிரும்பியே வருதலின்றியே, வாரிருக்கு முலைமலர் மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே மயங்கி யின்புறமுயங்கி யென்னையுமறந்து தன்னையு மறந்ததே” என்ற பாசுரமும் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

¶ ஆரானு மொன்றாதார் கேளாமே சொன்னக்கால் = சத்துருக்களுடைய காதிலே விழாதபடி ரஹஸ்யமாகச் சொல்லவேணுமென்று நெஞ்சோடே சொல்லியனுப்பினளாம். எம்பெருமானுடைய குணபூர்த்தியைப் பொறுக்கவில்லாத சிலர், நம்முடைய காரியத்தை ஆகவொட்டாமல் கெடுக்கிற முகத்தாலே எம்பெருமானுடைய தயாவாத்ஸல்யாதி குணங்களை அழித்துவிடக்கூடுமென்று அஞ்சுகின்றாள்போலும். ஒன்றாதார் — ஒன்றுதார்; (தம்மோடு மனம்) பொருந்தாதவர்; எனவே பகைவராவர்.

பணிகேட்டு ஆராயுமேலும் அதன்றேனிலும் = இவ்விடத்திலே பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி—“உன்னைக் கண்டபோதே ‘அவள் என்பட்டாள்? அவள் உளளோ? அவ்வாச்ரயம் இன்னும் நமக்குக் கிடைக்குமோ?’ என்று திருவுள்ளமானானே யாகிலும்; அங்ஙனன்றியே துஷ்யந்தனைப்போலே ‘நாம் அங்ஙனைக் கொப்பாளொருத்தியை அறியோம்’ என்றானாகிலும்” என்று.

¶ இப்புத்தகத்தில் முதலில் எழுதப்பட்டுள்ள சிறிய திருமடல் தாத்பர்யஸங்க்ரஹத்தில், இவ்விடத்திற்குத் தாத்பர்யம் சிறிது மாறுபாடாக எழுதப்பட்டு விட்டது. இவ்விடத்து உரைக்குத் தகுதியாக அதனை அறிஞர் மாற்றிக் கொள்க.

வல்வினையேன்=என் நெஞ்சும் எனக்கு உதவாதபடியான மஹா பாபத்தைப் பண்ணினேனென்கை. ஊராருகட்பதேயாயினேன்='ஒரு ஸாதநத்தை அநுஷ்டித்தாலன்றிப் பலன் ஸித்திக்க மாட்டாது' என்று ஊரார் சொல்லுவது; 'ஸாதநாநுஷ்டாநமெல்லாம் கால்கட்டு; அவனாலேதான் பேறு' என்று நான் சொல்லிக் கொண்டிருப்பது; இப்படி சொல்லிக்கொண்டிருந்த நானே 'மடலூரக்கடவே'னென்று இன்று சொல்ல நேர்ந்தபடியால் என்னுடைய அத்யவஸாயம் பழுதாகி ஊராருடையகொள்கையே பலித்ததாயிற்று என்பது கருத்து. மடலூர்வேனென்றபோதே ஸித்தோபாய நிஷ்டை குலைந்ததாமிறே. ... ... *

... ... மற்றெனக்கிங்கு
ஆராய்வா ரில்லை அழல்வாய் மெழுகுபோல்
நீரா யுருகுமென் னாவி நெடுங்கண்கள்
ஊரா ருறங்கிலுந் தானுறங்கா வுத்தமன்றன்
பேரா யினவே பிதற்றுவன் பின்னையும்
காரார் கடல்போலுங் காமத்த ராயினார்
ஆரே பொல்லாமை யறிவார்......—

பதவுரை

எனக்கு இங்கு ஆராய்வார் மற்று இல்லை	என்னைப்பற்றிக் கவலை கொண்டு விசாரிப்பவர்கள் இங்கு யாருமில்லை;
என் ஆவி	எனது ஆத்மவஸ்து
அழல் வாய் மெழுகு போல் நீர் ஆய் உருகும்	நெருப்பினருகே வைத்த அரக்குப் போல்நீர்ப்பண்டமாகஉருகாநின்றது;
நெடு கண்கள் தான்	நீண்ட கண்களும்
ஊரார் உறங்கிலும் உறங்கா	எல்லாரும் உறங்கும்போதிலும்உறங்க மாட்டா;
உத்தமன் தன்	அப்புருஷோத்தமனுடைய
பேர் ஆயினவே	திருநாமங்களாயுள்ளவற்றையே
பின்னையும்	மேன்மேலும்
பிதற்றுவன்	வாய்வந்தபடி சொல்லிக்கொண்டிரா நின்றேன்;
கார் ஆர் கடல் போலும் காமத்தர் ஆயினார்	அகாதமானகடல்போல அளவுகடந்த காமத்தையுடையவர்கள்

ஆரே — ஆர்தான்

பொல்லாமை அறிவார் — ஸ்வரூப விரோதமறிவர்கள்?

—***—ஆற்ருமை கரைபுரண்டால் சிலபேரோடே ஸல்லாபங்கள் செய்து ஒருவாறு தரித்திருக்க வேண்டாவோ? இப்படி பதற லாமோ? என்று சிலர் சொல்ல, அவர்கட்கு மறுமொழி கூறுகின் ருள் பரகால நாயகி. என் வார்த்தைகள் யாருக்கும் பிடிக்கமாட்டா வாகையால் என்னேடு உசாவ ஆரும் வரமாட்டார்கள்; என்பேரைச் சொன்னுலும் காதை மூடிக்கொள்வர்கள்; * உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்துக்கும் * உண்ணுஞ் சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணனென்றிருக்கு மெனக்கும் என்ன சேர்த்தியுண்டு? என்னெஞ்சம் எனக்கு உதவாதிருக்க வேறு உசாத்துணை யாவாருண்டோ? நெருப்பினருகே வைத்த மெழுகு போலே சிதிலமாகாநின்றது ஆத்மவஸ்து; உலகத்தாரைப்போலே உறங்கியாகிலும் ஆற்றலாமென்று பார்த்தால் எல்லாரு முறங்கினு லும் என் கண்கள் உறங்குகின்றில. இவ்வளவு ஆபத்காலத்திலே வந்து முகங்காட்டி உதவாதவனை மறந்திருக்க வேணுமே, அதுவும மாட்டாதபடி அவனது திருநாமங்களையே வாய்வெருவாநின்றேன்.

இப்பரகால நாயகி இப்படி சொல்லச்செய்தேயும் சிலர் ஸ்வ ரூபசிக்ஷைபண்ணத் தொடங்கினர்; அவர்களை நோக்கிச் சொல்லு கின்ருள்—“ஸ்ரீஜநகராஜன் திருமகள் பத்து மாஸம் ஆறியிருந்தாப் போலே நீயும் ஆறியிருக்கவேண்டாவா? அப்படியிராமல் பதறினல் ஸ்வரூபஹாநியன்ருே” என்றுதானே நீங்கள் சொல்லுவது; ஸ்வ ரூபஹாநியை நினைத்து ஆறியிருப்பவர்கள் மட்டமான காம முடையவர்களென்று கொள்ளுங்கள்; காரார்ந்த திருமேனியைக் காணவேணு மென்னு மாசை கரைபுரண்டிருப்பார்க்கு ஸ்வரூப ஜ்ஞாநத்தாலே ஆறியிருக்கப்போமோ? அப்படி ஆறியிருந்தவர்க ளுண்டாகில் அவர்களுடைய காதல் அல்பம் என்றன்ருே கொள்ள வேண்டும்—என்கிருள். ... ... *

... ... அதுநிற்க

ஆரானு மாதானு மல்ல ளவள்காணீர்
வாரார் வனமுலை வாசவ தத்தையென்று
ஆரானுஞ் சொல்லப் படுவா ளவளுந்தன்

பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்
ஊரா ரிகழ்ந்திடப் பட்டாளே மற்றெனக்கிங்கு
ஆரானுங் கற்பிப்பார் நாயகரே......—

பதவுரை

வார் ஆர் வனம் முலை வாசவதத்தை என்று	*சச்சணிந்த அழகிய முலையையுடைய 'வாசவதத்தை' யென்று*
ஆரானும் சொல்லப் படுவாள் அவள்	*எல்லாராலும் புகழ்ந்து சொல்லப்பட்டவளானவள்*
ஆரானும் ஆதானும் அல்லள் காணீர்	*ஸாமாந்யமான ஒருத்தியல்லள்; (மிகவும் ப்ரஸித்தையாயிருப்பவள்;)*
அவளும்	*அந்த வாஸவதத்தை தானும்*
தன் பேர் ஆயம் எல்லாம் ஒழிய	*தனது சிறந்த தோழிகளையெல்லாம் விட்டிட்டு*
பெரு தெருவே	*பெரிய தெருவழியே*
தார் ஆர் தட தோள் தளை காலன் பின் போனாள்	*மாலையணிந்த பெரிய தோள்களையுடையனும் விலங்கிடப்பெற்ற கால்களையுடையனுமான வத்ஸராஜனென்பவன்பின்னே புறப்பட்டுப்போனாள்;*
ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே	*(அவள்) ஊராராலே நிந்திக்கப்பட்டாளோ? (இல்லை)*
இங்கு	*இப்படிப்பட்ட எனது அவஸ்தையிலே*
எனக்கு	*பதற்றமுடைய எனக்கு*
மற்று கற்பிப்பார்	*எனது துணிவுக்கு எதிர்த்தட்டான பொறுமையை உபதேசிப்பவர்கள்*
ஆரானும்	*ஆராயிருந்தாலும்*
நாயகரே	*அவர்கள் எனக்கு நியாமகராவரோ? (அவர்கள் பேச்சை நான் பேணமாட்டேன்.)*

—***—இருந்தவிடத்திலிருக்கமாட்டாமல் நாயகன்பின்னே பதறி ஓடுவது என்னுடைய புதிய வழக்கமல்ல; இதற்கு சிஷ்டாசாரமுமுண்டென்று காட்ட முயன்ற பரகால நாயகி, வாஸவதத்தையென்று ப்ரஸித்தையான ஒரு புராதந ஸ்த்ரீயின் நடத்தையை எடுத்துக் காட்டுகின்றாள்.

"வாரார்வனமுலை வாசவதத்தையென்று ஆரானு மாதானு மல்லள் காணீர்"=ஸாமாந்யமான ஒரு ஸ்த்ரீயாகில் 'அவளுடைய நடத்தை நமக்கு ப்ரமாணமோ?' என்று கழித்துவிடலாம்; வாஸவதத்தை அப்படிப்பட்டவளல்லள்; விவேகத்திற் சிறந்தவள்; கற்பில் பெருத்தவள்; அனைவராலும் புகழப்பட்டவள்; அன்னவளது நடத்தை நமக்குப் பரமப்ரமாணமன்றோ வென்கிறாள்.

[**அவளுந்தன் பேராயமெல்லா மொழியப் பெருந்தெருவே, தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்.**] ஸுபந்து என்னுமொரு மஹாகவியால் இயற்றப்பட்ட **வாஸவதத்தா** என்று ப்ரஸித்தமான ஸம்ஸ்க்ருத—ஆக்யாயிகாப்ரபந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட வாஸவதத்தையென்ற கதாநாயகிதான் இங்கு ஆழ்வாரால் உதாஹரிக்கப்பட்டவளென்று பலர் ப்ரமித்திருக்கின்றனர். அந்த வாஸவதத்தை கவியினால் கல்பித்துக் கொள்ளப்பட்டவளேயன்றி ஒரு புராண நாயகியல்லள்; காதம்பரீ, மாலதீ, வஸந்தா என்று சில வ்யக்திகளைக் கவிகள்தாமே கல்பித்துக்கொண்டு நாவல் போன்ற க்ரந்தங்களை எழுதினாற்போல் ஸுபந்துகவியும் வாஸவதத்தையென்ற பெயரால் ஒரு வ்யக்தியைக் கல்பித்துக்கொண்டு தனது புத்தி சமத்காரத்தால் ஒரு கதை எழுதிவைத்தான். அர்வாசீநமாகிய அந்த நூலில் வருணிக்கப்பட்ட வாஸவதத்தை இத்திருமடலில் உதாஹரிக்கப்பட்டவளல்லள்; அந்த வாஸவதத்தையின் கதையே வேறு. அவள் ஒரு சாப விசேஷத்தால் கல்லுருவமடைந்ததாகவும் தனது காதலனாகிய கந்தர்ப்பகேதுவின் கரஸ்பர்சத்தாலே சாபம்நீங்கிப் பெண்ணுருவம் பெற்று அக்காதலனைக்கூடி மகிழ்ந்ததாகவும் அதிற் சொல்லப்பட்டுள்ளது. இங்கு ஆழ்வார் எடுத்துக்காட்டும் வாஸவதத்தையின் சரிதை அங்ஙனன்று; காதலனும் அப்பெயருடையவனல்லன். "தோழிமாருடைய பெரியதிரளைக் கடுக விட்டு, விலங்கிட்டிருக்கிற வத்ஸராஜன் பின்னே

போனாள்" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்துள்ளமையால், இவளது காதலனுடைய பெயர் வத்ஸராஜனென்றும், இவளது வரலாறே வேறுவகையானதென்றும் நன்கு விளங்கக் குறையில்லை. இவளுடைய சரித்திரம் ஏதோ ஒரு புராணத்தில் கூறப்பட்டிருக்கவேணும்; ஸ்ரீ மஹா பாரதம் முதலிய சில புராண இதிஹாஸங்களை ஆராய்ந்து பார்த்ததில் அடியேனுடைய சிற்றறிவிற்கு இவளுடைய வரலாறு எட்டவில்லை. இவளது கணவனான வத்ஸராஜனுடைய பெயர் மாத்திரம் மஹா பாரதத்தில் ஒரு மூலையில் படிக்கப்பட்டுளது. எங்கேயெனில்; ஆதிபர்வத்தில் த்ரௌபதியின் ஸ்வயம் வரத்திற்காகத் திரண்ட அரசர்களின் பெயர்களைச் சொல்லிவரும் ப்ரகரணத்தில், இருநூற்றோரா மத்யாயத்தில் இருபத்திரண்டாம் ச்லோகத்தில் "వత్సరాజశ్చ మతిమాన్" [வத்ஸராஜச்ச மதிமாந்] என்றுள்ளது காண்க. அந்தவத்ஸராஜனே இங்கு "தாரார் தடந்தோள் தளைக்காலன்" என்று ப்ரதிபாதிக்கப்பட்டானாகக் கொள்க. இந்த வரலாறு விரிவாக வந்தவிடத்தே கண்டுகொள்க. அரும்பதவுரைகாரரொருவர்—"வாஸவதத்தையான ராஜபுத்ரி வத்ஸராஜ னென்பானோடே ஸங்கதையாக, அவனை ராஜா சிறையிலே வைக்க, அவனையுங் கூட்டிக்கொண்டு அவன் பின்னே போனாளென்கிற கதை" என்றெழுதி வைத்திருக்கக் காண்கிறோமித்தனை. ஆனால், "கதாஸரித்ஸாகரம்" என்கிற வடமொழிப் புத்தகமொன்றில் பன்னிரண்டாவது தரங்கத்தில் இந்த வாஸவதத்தையின் சரித்திரம் இவ்விடத்திற்குப் பொருத்தமாக மிகவும் விரிவாயெழுதப் பட்டுள்ளது; கண்டுகொள்க. அப்புத்தகத்திற்கு எந்தப்புராணம் மூலமென்று ஆராயவேண்டும்.

வாஸவதத்தை யென்பவள் துணிந்து நாயகன் பின்னே பதறிச் செல்லவில்லையா? அவளை யார் ஒதுக்கிவிட்டார்கள்? அவளைப் போலே நானும் தெருவேறப் புறப்படத்தான் போகிறேனென்ற கருத்தாக உரைத்த பரகாலநாயகியை நோக்கிச் சில பெரியோர், 'அம்மா! இப்படி நீ சொல்வது தகுதியன்று; ஸ்வரூபஜ்ஞானமுடையார் இப்படி சொல்லத் தகாது' என்றாற்போலே சில உரைக்க, அவர்களைத் தூக்கி யெறிந்து பேசுகிறாள்—"மற்றெனக்கிங் காரானுங் கற்பிப்பார் நாயகரே?" என்கிறாள். என்னுடைய துணிவுக்கு எதிர்த்தட்டாக வார்த்தை சொல்லி என்னை சிக்ஷிப்பவர்கள் எனக்கு

நியாமகரல்லர்; அவர்கள் பேச்சை நான் செவியேற்க வேண்டியதே அநாவச்யகம் என்றுளாயிற்று.

பின்னை நீ செய்ய நினைத்திருக்கிற காரியம் என்னவென்று கேட்டார்க்குத் தன் உறுதியை வெளிப்படையாக விளம்புகின்றுள் மேல். ... ... *

... ... நானவனைக்
காரார் திருமேனி காணு மளவும்போய்ச்
சீரார் திருவேங் கடமே திருக்கோவல்
ஊரே மதிட்கச்சி யூரகமே பேரகமே
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்
ஆராமஞ் சூழ்ந்த வரங்கங் கணமங்கை
காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்
சீரார் கணபுரஞ் சேறை திருவழுந்தூர்
காரார் குடந்தை கடிகை கடன்மல்லை
ஏரார் பொழில்சூ ழிடவெந்தை நீர்மலை
சீராரும் மாலிருஞ் சோலை திருமோகூர்
பாரோர் புகழும் வதரி வடமதுரை
ஊராய வெல்லா மொழியாமே நானவனை
ஓரானை கொம்பொசித் தோரானை கோள்விடுத்த
சீரானைச் செங்க ணெடியானைத் தேன்துழாய்த்
தாரானைத் தாமரைபோற் கண்ணனை யெண்ணருஞ்சீர்ப்
பேரா யிரமும் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரா ரிகழிலு மூரா தொழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்.

பதவுரை

நான் அவனை கார் ஆர் திரு மேனி காணும் அளவும் போய்	காமம் தலைக்கொண்ட நான் அவனுடைய காளமேகத்திருவுருவைக்கண்டு களிக்கும் வரையில் ஊரூராகப்போய்

சீர் ஆர் திருங்கடமே...+...வடமதுரை—

சிறந்த திருவேங்கட மலை, திருக்கோவலூர், மதிள் சூழ்ந்த காஞ்சீ நகரத்திலுள்ள ஊரகம், அப்பக்குடத்தான் ஸந்நிதி,

சலியாமற் கிடந்த மருத மரங்களை முறித்த பெருமாள் எழுந்தருளியிருக்கிற திருவெள்ளறை, திருவெஃகா, பெரிய திருவாலி நகர், திருத்தண்கால், திருநறையூர், குட்டநாட்டுத் திருப்புலியூர், அழகிய தோட்டங்கள் சூழ்ந்த திருவரங்கம், திருக்கண்ணமங்கை, நீலமணி வண்ணனை கண்ணபிரானது திவ்ய தேசமாகிய திருவிண்ணகர், அழகிய திருக்கண்ணபுரம், திருச்சேறை, தேரழுந்தூர், ச்ரமஹரமான திருக்குடந்தை, கடிகைத் தடங்குன்று (அதாவது—சோளஸிம்ஹபுரம்), திருக்கடல்மல்லை, அழகிய சோலைகள் சூழ்ந்த திருவிடவெந்தை, திருநீர்மலை, அழகிய திருமாலிருஞ்சோலை, திருமோகூர், உலகத்தாரனைவரும் துதிக்கின்ற ஸ்ரீபதரிகாச்ரமம், வடதிசை மதுரை (ஆகிய)

ஊர் ஆய எல்லாம் ஒழியாமே	திவ்ய தேசங்களாயுள்ளவற்றில் ஓரிடமும் தப்பாமல் (எங்கும்புகுந்து)
ஓர் ஆனை கொம்பு ஒசித்து ஓர் ஆனை கோள் விடுத்த சீரானை	குவலயாபீடமென்ற ஒரு யானையின் கொம்பை முறித்தும் மற்றொருயானையின் இடரைப்போக்கியும் சீர்மை பெற்றவனாய்
செம் கண் நெடியானை	சிவந்தகண்களையுடையனாய்க்கொண்டு எனக்கு எட்டாதே யிருப்பவனாய்
தேன் துழாய் தாரானை	தேனொழுகுகின்ற திருத்துழாய் மாலையையுடையனாய்
தாமரைபோல் கண்ணானை அவனை	தாமரைபோன்ற திருக்கண்களையுடையனான அப்பெருமானைக் குறித்து
எண் அரு சீர் பேர் ஆயிரமும் பிதற்றி	எண்ணமுடியாத (கொடிய) குணங்களுக்கு வாசகமான (நூதந) ஸஹஸ்ரநாமங்களைப் பிதற்றிக்கொண்டு
பெரு தெருவே	பெரிய தெருவழியே
ஊரார் இகழிலும்	(என்னை) ஊரிலுள்ளாரெல்லாரும் பழித்தாலும்

நான் வார் ஆர் பூ பெண்ணை மடல் ஊராதொழியேன்	நான், நீண்டு அழகிய பனைமட்டையைக்கொண்டு மடலூர்வதை நிறுத்தமாட்டேன் (மடலூர்ந்தே தீர்வேன்.)

சிறிய திருமடல் பதவுரை முற்றிற்று.

—***—பந்தடிக்கத்தொடங்கிக் குடக்கூத்திலேயகப்பட்டுமெலிந்த நான், என்னை இப்பாடு படுத்தினவனுடைய காரார்ந்த திருமேனியைக் கண்டு களிக்கப் பெறுமளவும் அவன் குணங்கள் கொண்டாடியிருக்கும் தேச மெங்கும் நுழைந்து, விரஹம் தின்ற என் வடிவைக் காட்டி அவன் குணங்களை யழித்து வழியல்லா வழியினாலாயினும் அவனைப் பெறக் கடவேனென்று தன் துணிவை வெளியிடுகிறாள்.

கச்சியூரகம்=காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ உலகளந்த பெருமாள் ஸந்நிதி. பேரகம்—அப்பக்குடத்தான் ஸந்நிதி.

பேரா மருதிறுத்தான்='பேரா' என்பதை மருதுக்கு விசேஷணமாக யோஜிப்பது; பேராத—(அஸுராவேசத்தாலே) ஸ்திரமாக நின்ற யமளார்ஜுநங்களை என்றபடி. அன்றியே, பேரா என்பதை செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த காலவினையெச்சமாகக் கொண்டு [பேர்ந்து என்றபடியாய்] தளர் நடையிட்டுக்கொண்டு சென்று'மருதுகளை முறித்தானென்றுமாம். மருதிறுத்த வரலாறு— குழந்தைப்பருவமுள்ள கண்ணன் துன்பப்படுத்துகின்ற பலவிளையாட்டல்களைச் செய்யக் கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேரபுத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர்.—இந்தக் குபேரபுத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பல அப்ஸரஸ் ஸ்த்ரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்து கொண்டிருக்கையில் நாரதமாமுனிவர் அங்கு எழுந்தருள், மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க, இந்த மைந்தர்மாத்திரம் மதுபான மயக்கத்தால் வஸ்த்ரமில்லாமலே யிருக்க, நாரதர் கண்டு கோபங்கொண்டு 'மரங்கள்

போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபிக்க, உடனே அவர்கள் வேண்டிக்கொண்டதற்கு இரங்கி 'நெடுங்காலஞ் சென்ற பின்பு திருமால் உங்களிடம் வர நேரும் ஸமயத்தில் இவ்வடிவமொழிந்து முன்னையவடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடை கூறிப்போயினர். இப்படி சாபத்தினால் மரங்களான இவற்றில், கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அசுரர்களும் ஆவேசித்துக்கிடந்தனர் என்று கொள்ளல் வேண்டும்; "ஒருங்கொத்த விணை மருதம் உன்னிய வந்தவரை" என்றும் "பொய்ம்மாய மருதான வசுரரை" என்றும் பெரியாழ்வார் அருளிச்செய்திருத்தலால்.

வெஃகா = கச்சியில் ஸ்ரீ யதோக்தகாரி ஸந்நிதி. இவ்வெம்பெருமான், பிரமன் செய்த வேள்வியை அழிக்க வந்த வேகவதிநதியைத் தடுக்கும்பொருட்டு அதற்கு அணையாகக் குறுக்கில் பள்ளி கொண்டருளினவனாதலால், அப்பிரானுக்கு, வடமொழியில் 'வேகாஸேது' என்று பெயர்; அது தமிழில் 'வேகவணை' என்று மொழிபெயர்ந்து, அது பின் (நாகவணை யென்பது நாகணையென விகாரப்படுதல்போல, வேகணை என விகாரப்பட்டு, அது பின்னர் 'வெஃகணை' எனத்திரிந்து, தானியாகு பெயராய்த் தலத்தைக் குறித்து, அது பின்பு 'வெஃகா' என மருவி வழங்கிற்றென நுண்ணிதின் உணர்க.

திருப்புலியூர்—சிறுபுலியூரென்கிற சோழநாட்டுத் திருப்பதியென்று கொள்ளலாமாயினும் குட்டநாட்டுத் திருப்புலியூரென்கிற மலைநாட்டுத் திருப்பதியாகவே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் பற்றினர். விண்ணகரம் = ஒப்பிலியப்பன் ஸந்நிதி. கடிகை—சோளஸிம்ஹபுரம். घटिकाचलं [கடிகாசலம்] என்பது வடமொழித் திருநாமம்.

ஓரானை கொம்பொசித்த வரலாறு—வில்விழா என்னும் வியாஜத்தாலே கம்ஸனாலழைக்கப்பட்ட ஸ்ரீ க்ருஷ்ண பலராமர்கள் மதுரைக்கெழுந்தருளிக் கம்ஸனது அரண்மனையை நோக்கிச் செல்லுகையில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை கோபித்துவர, அவ் யாதவவீரர் அதனை எதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்

றையே ஆயுதமாகக்கொண்டு அவற்ருல் அடித்து அவ் யானையை உயிர் தொலைத்து விட்டு உள்ளே சென்றனர்.

எண்ணருஞ்சீர்ப் பேராயிரமும் பிதற்றி என்ற விடத்துப் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீ ஸூக்தி காண்மின்—"குணகதநம் பண்ணுகைக்கு ஒரு ஸ்ரீ ஸஹஸ்ர நாமமுண்டிறே; அப்படி குண ஹாநிக்கும் ஒரு ஸஹஸ்ரநாமம் பண்ணுகிறேன்"—என்று.

சீரார் திருவேங்கடம் முதலிய பல திருப்பதிகளிலே சென்று ஒவ்வொரு திருப்பதியிலும் ஒரு மூலையிலிருந்து நால்வரிருவர்க்குச் சொல்லி விடுகையன்றிக்கே நெடுவீதியேறப் புறப்பட்டு "இங்கே இப்படி குணம் பாராட்டிக்கொண்டுகிடக்கிற மஹாநுபாவனுடைய குணஹாநியை நாட்டாரும் நகரத்தாரும் நன்கு அறியுங்கோள்" என்று கோஷம்போட்டு மடலூரக்கடவேன்; இப்படி நான் செய்வதற்காக ஊராரெல்லாரும் என்னைச் சிறிதும் இகழாமல் தலைமேல் சுமந்து கொண்டாடவேணும்; அப்படி கொண்டாடாதே இகழ்ந்து பழி சொன்னர்களேயாகிலும் நான் மடலூருகை தவிரமாட்டேன் என்று தனது உறுதியை உரைத்துத் தலைக்கட்டினளாயிற்று.

பெண்ணை என்று பனைமரத்துக்குப் பெயர்; "வாரார்பூம் பெண்ணைமடல்" என்று பனைமடலைச் சிறப்பித்துச் சொன்னது என் கையிலே சிறந்த ப்ரஹ்மாஸ்த்ரமிருக்கிறபடி பாருங்கள்; இனி எனக்கு என்னகுறை? என் காரியம் கைபுகுந்ததேயாம் என்று தான் பரிக்ரஹித்தஸாதநத்தின் உறைப்பைக் காட்டினபடி. ...

பெருமாள் கோயில் ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

சிறியதிருமடல் திவ்யார்த்ததீபிகை

முற்றுப் பெற்றது.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

முடிவில் அநுசந்திக்கும் தனிப்பாடல்.

[கம்பர் பாடியது.]

(நேரிசை வெண்பா.)

ஊரா தொழியே னுலகறிய வொண்ணுதலீர்
சீரார் முலைத்தடங்கள் சேரளவும்—பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்
மன்றோங்க வூர்வன் மடல்.

(இதன் கருத்து.) *ஒளிபொருந்திய நெற்றியையுடைய ஸ்த்ரீகளே! எம்பெருமான் எனது முலைத்தடங்களிலே வந்து ஸம்ச்லேஷிக்குமளவும் நான் மடலூருகை தவிரமாட்டேன்; முன்பொருகால் உலகங்களையெல்லாம் அளந்து ஸ்வாதீநப்படுத்திக்கொண்ட பெருமான் எழுந்தருளியிருக்கிற திருநறையூரிலே நாற்சந்தியிலே நின்று பலருமறிய மடலூரக்கடவேனென்று பரகாலநாயகி சொல்லுகிற பாவனையாகவே இப்பாடல் பாடப்பட்டதென்க.*

மேல், பெரியதிருமடலில் மடலூர்தற்கிடமான திருப்பதிகளைச் சொல்லிக்கொண்டுவருமிடத்துத் திருநறையூரை முடிவாகச்சொல்லியிருப்பதாலும், "இரும்பொழில்சூழ் மன்னு மறையோர் திருநறையூர் மாமலைபோல்" என்று தொடங்கித் திருநறையூரில் தளர்ச்சியுண்டானதாக அருளிச்செய்தபடியாலும் அந்தத் திருப்பதியே ஆழ்வாருடைய திருமடலுக்கு ப்ரதாநலக்ஷ்யமான ஸ்தலமென்று கொள்ளப்பட்டதுபோலும். பெரிய திருமடலின் தனியனோடும் இக்கருத்து இணங்கும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒரு குறிப்பு.

திவ்யப்ரபந்தங்களில் பலபாகங்களை அடியேன் ஸம்ஸ்க்ருத ச்லோகமாக மொழிபெயர்த்துவரும் அடைவில் இச்சிறிய திருமடலையும் ஆர்யாவ்ருத்தத்தில் ச்லோகமாக மொழிபெயர்த்திருக்கிறேனாகையால் ஸம்ஸ்க்ருத ரஸிகர்களுக்கு அது மிகவும் அநுபாவ்யமாயிருக்குமென நினைத்து அதனையும் இங்கே வெளியிடுகின்றேன்.

ப்ர - *அண்ணங்கரார்யதாஸன்.*

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீரஸ்து ॥

ஶ்ரீபரகாலதிவ்யஸூரிப்ரஸாதிதஸ்ய

ஶ்ரீ லகுமதநவாஸீப்ரபந்தஸ்ய ப்ரதிக்ருதி: ॥

[ஶ்ரீகாஞ்சீ-ப்ரதிவாதிபயங்கராண்ணங்கராசார்யவிரசிதா]

[சிறிய திருமடல்.]

(தனியன்) முள்ளிச்செழுமலரோ.

(ஶார்தூலவிக்ரீடிதம்—)

ஸஞ்சாரகடாக்ஷஸஂக்ரதிதஶோப்யஹர்ஷ்யயாத:
விஶ்ராந்தகவிவிக்ரம: கலிஜிதாஹ்வயோதாரதீ: ।
கரோத்ஸதவிதாவாதயதிந்த்ரமாலே ஹ்ருத:
ப்ரதீப்தாந்தயாய ந: ப்ரமவாவாலிகாவ்யாம் க்ருதிம் ॥

அத ப்ரபந்தாரம்ப: ॥

[காரார்வரைக் கொங்கை + அதுவுரைக்கேன் கேளாமே.]

பநஹரிதகிரிகாசாப்யாவிபாமவயோராஶிவஸ்த்ரஸஂஹஸா।
உத்ருஹ்ஞாநாமஞ்ஜீ ஶோணாவிமதீவபுஸரிதாரோஹாரா ॥
ஶஹிதாவஸிதவநவிகாராஹ்யாவரணா ஹ்ஸஶோவ்யவ்ருதியாக்தா।
யர்பமாயாரணீமநாதஸ்யாஶஸ்யாஂஸ்யிதேஜஸ்தேநாரநள॥
த்ரயம் ஹி கதிதஶோஸ்தத்வ த்ரயம் விஶ்ருஶ்யஶோநம் ஸக: ।
யஶோஸ்து காமஸஂஜ்ஞம் ப்ரயதே யே தத்ர காமோஜஸ்ஹ்யா: ।
யஶோஸ்துவிநந்தநஂஸப்ராபாதேவதேஜஸ்தேநஹஸ்வத:
அத யே கதயந்த்யந்த்ருக்திஶவி வரிவதிஸ் பமவஹிதிவாதஸ்தாம் ॥
தேஷாஂமளகிகவாணீவிவேகவேயாயஸ்ஹேதாகேவவாரம்
அவிவேகஶந்மககம் தஸ்யாஶாவவாதயாதி நிஶ்சயத ॥ ௧ ॥

[illegible]

[அன்றியும் நீரார் + சேராவகையே சிலைகுனித்தான்.]

[illegible]

[செந்துவர்வாய்வாரார் + ஆராவெழுந்தானரியுருவாய்.]

[illegible] ॥ ௪௦ ॥

[illegible]
[illegible]
[illegible]

அன்றியும்பேர்வாமனாகிய + தீராநோய்செய்தானெனவுரைத்தாள்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சிக்கனமற்றாரானுமல்லாமை* ஆரானுமல்லனேயென்றொழிந்தாள்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[நானவனைக்காரார் திருமேனி + வாளாவிருந்தொழிந்தேன்.]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[வாராய்மடநெஞ்சே + போயினவேபிதற்றுவன்.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[காரார்கடல்போலும் + கற்பிப்பார் நாயகரே.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தேநவ ஹஸந்தி லோகாஶ்யவிர்ஜவக்ஷூார ஐஹ ஃலோயீஶா: ।

[நானவணைக்காரார் + வாரார்பூம்பெண்ணைமடல்.]

தஸ்ய ச ஸந்நிதிமாத்ரம் தீர்க்ஷ்ணாஃஸஞ்ஜஸா மகவா ॥
ஸ்ரீமத்வேங்கடஶைலே ஸ்ரீகோவாயவைத்நக்ஷேத்ரே ।
த்ருகாராவ்ருதகாஞ்ச்யாம் ரமக்ஷேத்ரே ஹாயயாவ்யவரே ॥
நிர்ஷந்தாஜர்நஹரிஹரீஸநாய ஸிதாவய க்ஷேத்ரே ।
வேமாஸேதக்ஷேத்ரே வ்ருஷாத்ரிவர்ரேவஶீ தவாதவரே
ஸ்ரீமத்ஸர்மஸுவர்யம் ஸ்ரீஹாதர்யநாத்ரிவ க்ஷேத்ரே ।
ரம்யாராலே ஸ்ரீரங்கே ரஜ்ஞ க்ஷேத்ரே ச க்ருஷ்ணஞாவே ॥ ௧௭ ॥
நீரஜணிவண்ஹாஸ்வீ க்ருஷ்ணஸநாயவிஷ்ணவதவய்யா ।
ஸந்தரக்ருஷ்ணக்ஷேத்ரே ஸாரக்ஷேத்ரே ச ந்ருரயவய்யா ॥
ஸ்ரீகஹ்லேவோணநமரேஸ்ரு ரஷிவடிகாவமெஸ்யிஞாயா ।
ரம்யாராலே ஸ்ரீரங்கே வாஸவீஶாவ்யஹமவத: க்ஷேத்ரே ॥ ௯௧ ॥
தோயாத்ருளவநாத்ருள ஸ்ரீரோஹவரேவவதஸிகா க்ஷேத்ரே
ஸவர்ஜநஸ்த்தவிஹவேவாத்ரயாராஸோவ்யிவ்யவரே ॥
சந்த்ரவ்ஷவீச ஸஸ்தேஷ்வாயரேந்ஷ் லோஹாரஹம் மகவா ।
வனகமஜதஹஞகமவரமஜத்ராணவிஶ்ருதமணாஞ்யா ।௭௧।
ஸரேணமொவநீஶம் ஸ்ஹ்ருதராவ்கதவஸிகாராவ்யா ।
ஸ்தக்வாஸரஸிஜமொவநஸ்வ்ருகவ்யாணமணஸராவ்யாஹி: ॥
விவதரவீயிகாயாம் நமரஷ்யஜேந்ஷ தபஷயஸ்வதவீரா ।
தீவர்யேநாஹரவாஸீயாநக்ருகாஃஹவரதாநஸ்யா ॥

சிறியதிருமடல் முற்றிற்று.

[ஊராதொழியேன்.]

வாஸீயா நஹம் ஸஸ்தஜநதாவ்ருக்ஷ்யம் ந ஜஹ்யாம் ப்ருவம்
ஸோமோஸ்ஸந்நரஸாமஶாஷி முநா:! யாவத்க்ஷவ மே ஹரி: ।
ஸ்ரீமத்ஸ்தாவஹம் ஸஸ்தஜமத்ரோதஸ்ஸமஸாஹ்வய
க்ஷேத்ரேத்ருவகாரவக்ஷிஷ்வவ்ருதநயாம் வாஸீஸரோமாஹணம் ॥

இதி பரகாலகவீரிதமஹாவாஸீம்ருஷ்ய ஸம்ஸ்க்ருதவிவ்ருதி: ।
காஞ்சீவாஸிபயங்கரவம்ஶ்யாண்ணங்கரார்யவிரசிதா ஜயதி ॥

[ஆழ்வாரருளிச்செயல்களில் பலபல பாகங்கள் இவ்வாறு ஸம்ஸ்க்ருத ஸ்லோகரூபமாக அடியேனால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நாலாயிரத்திற்கும் இவ் வாறு சுலோகங்கள் எழுதப்பட்டும் வருகின்றன. அவை முறையே வெளிவரும்]

இங்ஙனம்,

ஸ்ரீ வைஷ்ணவதாஸன்,

பி. அண்ணங்கராசார்யதாஸன்.

[stamp]